Registered at the G. P. O. as a Newspaper வாரப் பதிப்பு விலை சதம் 15

ஈழநாடு
EELA NADU

பேன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 48

மலர் 6 யாழ்ப்பாணம் சோபகிருது மாசி 4 ஆம் நாள் ஷவ்வால் பிறை ! (16-2-64) ஞாயிற்றுக்கிழமை இதழ் 6

அரசாங்க நிர்வாக ஒழுங்கீனங்கள்
விசாரணை செய்ய தனிப்பகுதி

கொழும்பு, சனி

அரசாங்க இலாகாக்களிலும் அமைச்சுக்களிலும் இடம்பெறும் ஒழுங்கீனங்கள், ஊழல்கள், வீணான செலவுகள், சீரற்ற நிர்வாகம் ஆகியன பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ள புகார் குறித்து விசாரணைநடத்துவதற்காக பிரதமரின் கீழ் ஒரு தனிப் பிரிவை ஸ்தாபிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தப் பிரிவிலிருந்து ஓர் உத்தியோகத்தரையோ அல்லது பல உத்தியோகத்தர்களையோ கொண்ட விசாரணைக் கமிட்டியை பிரதமர் நியமிப்பார். இது சம்பந்தப்பட்ட அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்குமாறும் கமிட்டி கோரப்படும்.

இந்தவிசாரணைக்குத் தேவையெனப்பட்டால் சம்பந்தப்பட்ட எந்த தஸ்தாவேஜுகளையும் பார்வையிட விசாரணை அதிகாரிகளுக்கு அதிகாரம் இருக்கும் என அறியப்படுகிறது.

விசாரணையின்போது நேர் முகமாகவும் எழுத்து மூலமாகவும் விளக்கம் கோரப்பட்டால் அத்தகைய விளக்கங்களைக் கொடுப்பது ஒவ்வொரு அரசாங்க ஊழியரின் கடமை என திறைசேரிச் சுற்றறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.

மறியல்
இயக்கம் என்றும் ஆரம்பிக்கப்படலாம்
ஒத்திவைப்பு தற்காலிகமானதே
வல்வெட்டித்துறைக் கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம் அறிவிப்பு

உடுப்பிட்டி, சனி

'இம்மாதம் 17-ம் திகதி ஆரம்பிக்கப்படவிருந்த மறியல் இயக்கம் தமிழரசுத் தந்தையின் கட்டளைப்படி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த இயக்கம் ஒரு சமயம் அடுத்த நாளான 18-ம் திகதியும் ஆரம்பமாகலாம்.'

இவ்வாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் வல்வெட்டித்துறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோவில் வீதியில் நடைபெற்ற தமிழரசுக்கட்சிப் பொதுக் கூட்டத்தில் திரு அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"சிங்களத்தில் உயர்தரக் கல்வி பெற்றவரையே சீதனம் கொடுத்து மாப்பிள்ளையாகப் பெறுவேன் என்று ஒரு தமிழ்ப் பெண் கூறியதாக ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் வந்த செய்தியைக்கண்டு மிகவும் வெட்கமடைகிறேன்."

படித்த பட்டதாரிகளான எமது இளைஞர்கள் வேலை கேட்டுச் சென்றபோது, காலவுக்குச் செல்லுங்கள் என்று மந்திரி கூறினாராம்.

தீவுப்பகுதி எம். பி. திரு நவரத்தினம் பேசுகையில், தமிழரசுக்கட்சியினர் நடத்திய சத்தியாக்கிரகம் மூலமாகவும் எதிர்ப்பு மூலமாகவும் ஒரளவு சிங்களத் திணிப்பு தடைசெய்யப்பட்டது என்றார்.

பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

கடந்த பல வருடங்களாக இலங்கையில் மொழி, இன மதப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

அகிம்சைமூலம் வெற்றிபெற்றவர்களின் சரித்திரம் நமக்கு நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கிறது.

கனி மனநோயாளர் செய்ய வேண்டியிருப்பதாகத் தெரிகிறது.

வல்வெட்டித்துறை தமிழரசுக்கட்சிக் கிளைத்தலைவர் திரு கா. கந்தசாமி பேசுகையில் தமிழர்களாகிய எமக்கு விமோசனம் கிடைக்கவேண்டுமானால் சாதி,மத பிளவுகளை மறந்து அன்பு அறம் பண்பு கட்டுப்பாடு முதலியவற்றை மேற்கொண்டு ஒழுகவேண்டும் என்றார்

இராணுவத்தினரின் செயல்கள் பற்றிப் புகார் செய்யும் மக்கள் பின்னர் வழக்குவந்தபோது சாட்சிசொல்லமறுத்து விடுகிறார்களென்றும் இதனால் மேல் நடவடிக்கை எடுக்க முடியாது போய்விடுகிறதென்றும் இவ்விதமில்லாது சாட்சி கூறமுன்வர வேண்டுமென்றும் கூறினார்.

உடுப்பிட்டி தமிழரசுக் கட்சிக் கிளைத்தலைவர் திரு. க. ஜெயக்கொடி பேசுகையில் எல்லாம் தமிழ் இயக்கத்தை தமிழர்கள் ஆதரிக்கவேண்டும் எனக் கூறினர்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், தமிழரசுக் கட்சி நிர்வாகசபைச் செயலாளர் திரு. க. சிவஞானசுந்தரம் ஆகியோரும் பேசினர்.

கியூபாவுடன் உறவு கொண்டால் உதவி நிறுத்தப்படும்
அமெரிக்கா இயற்றியுள்ள புதிய சட்டம்

வாஷிங்டன், பெப். 15

கியூபாவுக்கும் கியூபாவிலிருந்தும் பொருள்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு அமெரிக்கா ராணுவ, பொருளாதார உதவியளிப்பதை நிறுத்திக்கொண்டுள்ளது.

இன்றுமுதல் அமுல் நடத்தத் தொடங்கியுள்ள சட்டத்தின் பிரகாரம் இது வலுப் பெறுகிறது.

இச்சட்டத்தின்படி கியூபாவுடன் ராணுவ பொருளாதார ரத்தொடர்புகள் வைத்துக் கொள்ளும் எந்த ஒரு நாட்டுக்கும் அமெரிக்கா ராணுவ, பொருளாதார உதவி அளிக்காது. முன் அளித்துவரப்பட்டிருந்தாலும் அது உடன் துண்டிக்கப்படும்.

ஐ. அ. கு. மந்திரி இங்கு விஜயம்

கொழும்பு, சனி

ஐக்கியஅரபுக்குடியரசு சமூக விவகார மந்திரி டாக்டர் திருமதி ஹெட்மாட் அபுசாய் வருகிற செவ்வாய்க் கிழமை இலங்கைக்கு விஜயம் செய்ய விருக்கிறார்.

இலங்கைப் பிரதமரின் அழைப்பின்பேரில் இங்குவரும் இவர் பல மாதர்கழகங்களுக்கும் சென்று பார்வையிடுவார். ஐக்கிய அரபுக்குடியரசில் மந்திரிப் பதவிவகிக்கும் முதலாவது பெண் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தாயகம் செல்லும் அதிபருக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் வாத்தகக் கணக்கியல்கல்லூரி அதிபராகக் கடமையாற்றித் தமது தாயகம் செல்லும் ஸ்ரீ தாராச்சந்துக்கு சென்ற வியாழக்கிழமை இரவு கல்லூரி மாணவர்களால் பிரிவுசார விருந்தொன்று அளிக்கப்பட்டது.

வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியர் திரு. கோபால பிள்ளை. ஆசிரியர் திரு. இராஜதுரை ஆகியோரும் மாணவர்களும் அதிபரின் சேவையைப் பாராட்டிப்பேசினர்கள்.

அங்கொடையில்

மனநோயாளர் செய்யும் வேலை!

கொழும்பு, சனி

அங்கொடை மனநோயாளர் ஆஸ்பத்திரியிலுள்ள மனநோயாளர்கள் அவ்வப் மரணமும் சகநோயாளரைப் புதைப்பதற்கான சகல வேலைகளையும் தாமே செய்ய வேண்டியிருப்பதாக அறியப்படுகிறது.

இங்கு மரணமாகும் நோயாளர்களுக்கு உறவினர்கள் யாரும் இல்லாவிடில் இறந்தவர்களின் சடலங்களை இங்கேயே புதைப்பது வழக்கம்.

குழிவெட்டும் வேலைகள் செய்வதற்கென இங்கு கூலியாட்கள் இருந்தும் இந்த வேலை

மின்சார இலாகா பற்றி பட்டின சபை புகார்

மானிப்பாய், சனி

மானிப்பாய் பட்டினசபைக்கு வரவேண்டிய மின்சார வருமானத்தை மின்சார இலாகா எடுத்துக் கொள்வதாக மானிப்பாய் பட்டினசபை முறைப்பாடு தெரிவித்துள்ளது.

இது குறித்து மானிப்பாய் பட்டினசபைத் தலைவர் தெரிவித்துள்ளதாவது:-

மானிப்பாய் மின்சார விநியோகம் 1952-ம் வருடம் ஆரம்பிக்கப்பட்டபோது 30 பேர் மட்டுமே பாவிப்பாளர்களாக இருந்தார்கள். தற்போது 326 பேர் பாவிப்பாளர்களாக இருக்கிறார்கள்.

இப் பட்டினசபைக்கு வரவேண்டிய வருமானமும், வரியிறுப்பாளருக்கு இச்சபை செய்துகொடுக்க வேண்டிய வசதிகளும் இலாகாவின் தலையீட்டினால் தடைப்படுத்தப்படுகிறது இதனால் வரியிறுப்பாளரின் முறைப்பாடுகள் நாளாந்தம் அதிகரித்துக் கொண்டு வருகிறது.

மின்சார இலாகாவினர் மேல திக வேலையை தமது ட்ரான்ஸ்போமருக்குக் கொடுக்கப்படாதென்றும் இவ்விதம்கொடுத்து தங்களது இயந்திரம் பழுதடைந்தால் எம்மிடமே அதன் செலவை அறவிடப்போவதாகவும் கூறுகிறார்கள். ஆனால் எங்களது அனுமதியின்றி இலாகாவினர் பட்டினசபை எல்லைக்குள் இருக்கும் ஓர் இனிப்புத் தொழிற்சாலைக்கு 30 கில்லோவாட் மின்சக்தி கேரடியாகக் கொடுத்து எமக்கு வரவேண்டிய வருமானத்தைத்தாம் பெற்றுக் கொள்கிறார்கள். இது மிக்க வருத்ததைத் தருவதாகும்.

இவ்விதநிலைமையைநீக்குமுகமாக விரைவில் ஒரு மின்சார சபையை நிலையத்தை அமைத்துத்தர அரசாங்கம் முன் வரவேண்டும்.

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
சுருணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு
BAYER
பொலிடோலுடன்--மெற்றசிஸ்ரொக்ஸ்
FOLIDOL METASYSTOX
கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்
PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T'GRAMS ROYAEL

ஈழத்து ஈச்சுவரங்கள் —4.

'கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த' திருக்கோணேஸ்வரம்

— வை. முத்துக்குமாரசுவாமி பி. ஏ. —

இலங்கை என்னும் ஈழ நாட்டின் கிழக்குக் கரையிலே, "கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே" என்று திருஞான சம்பந்தர் கோணேஸ்வரத்தில் உள்ள சிவபெருமானை வர்ணிக்கிறார். அவர் குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங் கோணமாமலை அமர்ந்தாரே என்றும் குறிப்பிடுகின்றார். இது திருக்கோணமலையில் காணப்படுகின்றது. கொழும்பில் இருந்து திருக்கோணமலை 194 மைல் தூரம் யாழ்ப்பாணத்தில் இருந்து 137 மைல் தூரத்தில் உள்ளது. புகையிரத மூலமாகவும், பஸ் வண்டி அல்லது கார் மூலமாகவும், விமான மூலமாகவும் இத் தலத்துக்குப்போக வசதிகள் உள்ளன. ஈழநாட்டின் இரு தேன் பொந்துகள் திருக்கோணேசுவரமும், திருக்கேதீச்சரமும் என்று நாவலர் பெருமான் கூறியது சாலவும் பொருத்தமானதே.

இதற்கு உள்ள பெயர்கள்

திருக்கோணமலை, திருக்கணமலை என்றும் வழங்கப்படுகின்றது என்று ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் எழுதிய "தமிழகம்—ஊரும் பெயரும்" என்னும் நூலில் ஒரு குறிப்புக் (பக் 175) காணப்படுகின்றது.

இவ்வூரில் உள்ள பழைய ஏடுகளில் (முன் பின் நூறு ஆண்டுகள் முன்) இதன் பெயர் திருக்கோணமலை எனக் காணப்படுகிறது. இதனை திரிகோணமலை என்றும், மூன்று மலைகள் திரிகோணவடிவில் இருந்தமையால் 'கோணமாமலை" எனக் கூறப்பட்டது என்றும்கூறுவர். திருக்கோணமலை என்று திருக்கோணமலைப் புராணம் கூறுகின்றது.

கோணமலை என்பதற்கு திரு என்னும் சிறப்பு அடைவைத்து திருகோணமலை, திருக்கோணமலை ஆயிற்று என்பர். தெக்கிண கைலாச புராணத்திலும் வேறு புராணங்களிலும் இது கைலாசம், தென் கைலாசம், திருமலை திருகுன்றமலை என்று புனைந்துரைக்கப்படுகின்றது. சிங்கள ஆராய்ச்சியாளர் இதுவே "கோகண்ணம்" என்று கூறி மலைப்புறுவர்.

திருஞான சம்பந்தர் காலத்தை ஆராய்ந்தவர்கள் டாக்டர் ரெயிலர், அவர் காலம் கி. மு. 1320 எனக் குறித்துள்ளார் சபாரத்தின முதலியார். இவர் காலம் கி. மு. 1465 ஆகலாம் என்பர். டாக்டர் கோல்ட்வெல் அவர் காலம் கி. பி. 1292 காலம் எனக் குறித்துள்ளார். திருவாங்கூர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, டாக்டர் கோல்ட்வெல் பிழையென்றும், அவர் காலம் கி. பி. 550 - கி. பி. 700 க்கு இடையேயுள்ள காலம் எனவும் குறிப்பிட்டுள்ளார். 6-ம், 7-ம் நூற்றாண்டளவில் பல்லவர்கள் எனப்படும் கன்னடர் அழகான கோவில்களை கருங்கல் திருப்பணிகளாக அமைத்திருக்கின்றனர். திருஞானசம்பந்தர் கோணேஸ்வரத்தின் கரையிலே சந்தனமரங்களும், அகில் மரங்களும் மிதந்து வந்தன என்றும நித்திலம் கொழிக்குது என்று கூறுகிறார். கோணேசுவரத்துச் சிவன்கோவிலைச் சமீபிக்கும் பொழுது, பல மரங்களின் சோலைகளும், மலைகளும் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன.

தெக்கிண கைலாசபுராணம் திருக்கோணமலையின் உற்பத்தியைப் பற்றிக் கூறும் வரலாறு சரித்திரத்துக் கெட்டாதது. பழைய காலத்திலே ஆதிசேடனும், வாயுபகவானும் இருவரும் மாறுபட்டு தம் வலிமையைக் காட்ட நினைத்தனர். ஆதிசேடனனவன், உலகின் மத்தியில் உள்ளது எனப் புராணங்கள் வர்ணிக்கும் மகா மேருவின் சிகரங்களைத் தன்னுடைய படங்களினாலே மூடிக்கொண்டான். அதைக் கண்ட வாயு பகவான் தன் வலிமையைக் காட்ட நினைத்து மேருமலையின் சிகரங்களில் மூன்றைப் பிடுங்கிக் கடலில் வீசி எறிந்தான். அவற்றுள் ஒன்றே திருக்கோணமலையாம். மூன்று இடங்களும் தென் கைலாசம் எனப்படுகின்றன.

இராவணன் தொடர்புள்ள கதை

இத்தகைய பழமை வாய்ந்த மலையில் உள்ள திருக்கோணேசுவரத்துக்கு இராவணனும் அவன் தாயாராகிய மாயா கன்னி வழிபடச் செல்வதுண்டு. அவள் இருந்த இலங்காபுரத்தில் இருந்து இங்கு வருவது தூரமானபடியால் அந்த லிங்கத்தை பெயர்த்து இலங்காபுரிக்குக் கொண்டுசெல்ல இராவணன் முயன்றான். இன்று சுவாமிமலை எனக் கூறப்படும் மலையின் அண்மையில் காணப்படும் பிளவு இராவணன் வெட்டுஎன வழங்கப்படுகின்றது. இதுவே இராவணன் லிங்கத்தை வெட்டிஎடுக்க எத்தனித்த இடமாம்.

கன்னியாய்

இராவணன் வெட்டிக்கொண்டிருந்த பொழுது விஷ்ணு கிழப்பிராமண வேடதாரியாய் அங்கு தோன்றி. "உமது தாயார் இறந்துவிட்டார்; சமீபத்தில் நீர் அந்தியேட்டிசெய்ய உள்ளது" என்று கூறினார். இராவணன் கிண்டி எடுத்த நீரூற்று அவனுடைய தாயாருக்கு அந்தியேட்டிசெய்ய தீர்த்தக்கரையானது. இன்று திருக்கோணமலைக்கு ஆறுமைல் சமீபத்தில் கன்னியாய் என்னும் ஊர் உளது. அதில் ஏழு இயற்கை நீரூற்றுகள் உள்ளன. இதுவே கோணேசர் கோவிலுக்குத் தீர்த்தத்தலமாக விளங்குகின்றது.

இராவணன் ஒரு திராவிடன்; சிறந்த சிவபக்தன் "வில்லிப் பொத்து" என்னும் மிகப் பழைய சிங்கள ஏடு கொழும்பு நூதனசாலையில் உண்டு. அந்த ஏட்டில் இராவணன் ஒரு தெலுங்கன் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இராமபிரான் திருக்கோணமலையில் உள்ள சிவனை வழிபட்டுச் சென்றார் என்று முன்னீசுவர மான்மியம் குறிப்பிடுகின்றது. பத்தாயிரம் ஆண்டுகளுக்குமுன்பின் லிங்கவழிபாடு எகிப்துமொஹெஞ்சோடேரோ (பாகிஸ்தான்) போன்ற தேசங்களில் இருந்தது என்று புதைபொருள் ஆராய்ச்சியாளர் அறுதியிட்டுக் கூறுகின்றனர்.

விசய மன்னன் இலங்கையில் ஆட்சி செய்யத் தொடங்கியபொழுது நாலு பக்கங்களிலும், தனது காவலுக்குக் கோவில்கள் தாபித்தான் என்றும் திருக்கோணமலைக்கு மேற்கேயுள்ள தம்பலகாமத்தில் புழுதிபட்டுக் கிடந்த சிவன் கோவிலை (கோணேசர் கோவிலை) திருத்தி அமைத்தான் எனவும் வைபவமாலை கூறுகின்றது. குளக்கோட்டன் மறுவழிவந்த மன்னன் இக்கோவிலுக்கு பல திருப்பணிகள் செய்வித்தான். வன்னியர்களை நியமித்தான். வன்னியர்கள் பாண்டிய குறுநில மன்னர். பறங்கிப் படைத் தலைவன் கொன்ஸ்ரன்ரைன் டிசா என்பவன் கோணேசுவரர் கோவிலை 1620-ல் இடிப்பித்து, அக்கற்களைக் கொண்டு திருக்கோணமலையில் ஒரு கோட்டை கட்டுவித்தான். அந்தக்கோட்டை பிரடெறிக் கோட்டையின் அகத்திலேதான் மாபெரும் சிவன்கோவில் ஒரு காலத்தில் விளங்கியது. இதில் ஆயிரம் தூண்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஐயாயிரம் சைவத் தொண்டர்கள் நின்று வழிபடத்தக்கதாக வசதி இருந்தது. வழிபடுவதற்கு ஏற்ற வாய்புகளுடன் அமைக்கப்பட்டிருந்தது என்று குவிறேஸ் என்னும் போத்துக்கீச சரித்திர ஆசிரியர் கூறுகிறார். அக்கோட்டையைக் கட்டும் பொழுது ஒரு கல்வெட்டுக் கண்டெடுக்கப்பட்டது. அதில் காணப்பட்ட வார்த்தைகளின் சாரம் என்னவெனில்:- "இவ்விலங்கையின் சக்கரவர்த்தியான மனுராசா இவ்வாலயத்தைகி.மு. 1300 ஆண்டுக்குச் சரியான வருடத்தில் கட்டுவித்தான்; இதனை இடித்த பின் இதனைக்கட்டி எழுப்புவதற்கு இத்தீவில் அரசன் இருக்க மாட்டான். இக்குறிப்பை டிசா போர்த்துக்கலுக்கு அனுப்பி வைத்தான். இன்று அதை லிஸ்பன் நூதனசாலையில் உள்ள சரித்திர ஏடுகளுட் காணலாம். மனு அரை குறையாகவிட்ட கோவிற்திருப்பணியை அவன் வழியில் வந்த குளக்கோட்டன் என்னும் மன்னன் நிறைவேற்றி வைத்தான் என்று தெக்கிண கைலாசபுராணம் கூறுகின்றது.

திருக்கோணமலையில் உள்ள "கோணேசர் கோவிலை" இடிக்க முன்னர், அங்கு உள்ள பிராமணர்களும் தொண்டர்களும் அக்கோவிலில் உள்ள விக்கிரகங்களை, கிணறுகளிலும் வேறு இடங்களிலும் போட்டுவிட்டு வெளிக்கிளம்பினர். ஒல்லாந்தர் ஆட்சி சைவமக்களின் இருள்காலமாக இருந்தது.

பிரிட்டிஷ் ஆட்சியில், சுவாமி மலையில் உள்ள 300 அடி உயரமுள்ள கோணேச பர்வதத்திலே சைவமக்கள் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் வந்து கர்ப்பூரம் கொழுத்தி வழிபட்டு வந்தனர். திருக்கோணமலையில் 30 மைல் அண்மையில் உள்ள திருக்கரசையம்பதியில் அகஸ்தியர் வழிபட்டார் என்றும், சிங்கபூதரன் என்னும் சோழ மன்னன் ஒரு பெரிய சிவன் கோவிலை அமைத்தான் என்றும் திருக்கரசைப் புராணம் கூறுகின்றது.

திருக்கோணமலையும் அதன் சூழலும்

வன்னி வளநாட்டை ஆட்சி செய்த வன்னியர் கோணேசர் கோவிலைப் பரிபாலனஞ் செய்விப்பதற்காகவே குளக்கோட்டு மன்னனால் கொண்டுவரப்பட்டனர் என்று வையாபாடல், வைபவமாலை, தெக்கிண கைலாச புராணம் முதலியநூல்கள் கூறுகின்றன. கோவிலுக்குத் தேவையான பழத்தோப்புக்கள் உள்ள இடம் தோப்பூர் எனப்பட்டது. கோணேசப் பெருமானுக்கு மல்லிகை எடுக்கப்பட்ட தீவு, மல்லிகைத்தீவு எனப்பட்டது.

கஜபாகு என்னும் சிங்கள அரசன் கோணேசர் கோவிலை இடிக்க, மனதில் கருதி பெரிய படையுடன் சென்றான். அவன் போகும் வழியில் திருக்கோணமலைக்குச் சிறிது தூரத்தே இரவு தங்க நேரிட்டது. அவன் கண் பார்வையை அன்றிரவு இழந்தான். அடுத்தநாள் ஒரு பிராமணன்போல் சுவாமிவந்து

(9-ம் பக்கம் பார்க்க)

மோட்டோர் வண்டி உரிமையாளருக்கு ஒரு நற்செய்தி!
உங்கள் மோட்டோர் வண்டிகளுக்கு வரும் பிழைகளுக்கு குறைந்த செலவில், குறுகிய காலத்தில், நம்பிக்கையும் உத்தரவாதமும் தரக் கூடிய சிறந்த சேவைக்கும்
வண்டிகளை விற்பனைக்கோ அல்லது வாங்கவோ வேண்டுமா?
இன்றே நாடுங்கள்
வின்ஸ்லோஸ்
ஓட்டோ மோபைல் என்ஜினியர்ஸ்
மின்சாரநிலைய வீதி, [போன்: 269] யாழ்ப்பாணம்.
WINSLOWS Automobile Engineers
Power House Road, Jaffna.
பொறியியல் தொழில் நுட்ப வல்லுனர்களின் மேற்பார்வையில் பயிற்றப்பட்ட திறமை வாய்ந்த உதவியாட்களின் உதவியுடன் சிறந்த சேவை செய்து வருகின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

கல்லோயாத் திட்டத்தில் மேட்டு நிலச்சாகுபடி

— வி. பி. சிவப்பிரகாசம் —

காட்டு விலங்குகள் நிறைந்த சோலைக்காடாகவே பத்து வருடங்களுக்கு முன்பு இருந்த கல்லோயாப் பள்ளத்தாக்கு இன்று ஒரு நவீன விவசாயக் களஞ்சியமாக மாறி பள்ளத்தாக்கின் எல்லாப்பகுதியிலும் ஒரே பச்சைப் பசேல் என்று காற்றுக்கு அசைந்தாடிக் கொண்டிருக்கும் நெல் வயல்களாகவே காட்சியளிக்கிறது.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு உருவாக்கப்பட்ட விவசாயக் குடியேற்றத் திட்டங்களில் கல்லோயாத் திட்டம் தான் ஒரு உருப்படியான திட்டமென்பதும், கணிசமான அளவுக்கு வெற்றியும் அளித்துள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கதொன்றாகும். கல்லோயாத் திட்டம் பாராட்டத்தக்கமுறையில் வெற்றி அளித்ததற்கு முக்கிய காரணம் இத்திட்டத்துக்காக "கல்லோயா அபிவிருத்திச் சபை" என்று ஒரு சபையை நியமனம் செய்து அச்சபைக்கு போதுமான அதிகாரம் அளிக்கப்பட்டதுதான்.

"கல்லோயா அபிவிருத்திச் சபை" கல்லோயாப் பள்ளத்தாக்கை வலதுபுறப்பிரதேசம், இடதுபுறப்பிரதேசம் என்று இரு பிரிவுகளாகப் பிரித்து அபிவிருத்தி வேலைகளை ஆரம்பித்தது. இடதுபுறப்பிரதேசத்திலுள்ள காடுகளை அழித்து நீர்ப்பாசனவசதியை ஏற்படுத்தியது குடியேற்றக் கிராமங்களை அமைத்து நாட்டின் பல்வேறுபாகங்களில் விவசாயத்தில் ஆர்வமும், அக்கறையும் இருந்தபோதிலும் குடியிருக்கவே நிலமில்லை என்று தத்தளித்துக்கொண்டிருந்த மக்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் வகையில் ஒவ்வொரு குடியேற்றக் கிராமத்துக்கும் 150 குடும்பங்கள்வீதம் தெரிவு செய்யப்பட்டு 40 கிராமங்களிலும் குடியேற்றப்பட்டது. அவர்களுக்கு ஒருஏக்கர்மேட்டு நிலமும், நான்குஏக்கர் நெற்சாகுபடிக்கு ஏற்ற நிலமும், குடியிருக்கவீடும் அமைத்துக் கொடுக்கப்பட்டது. சும்மா கிடந்தவர்களுக்கு இப்படிவசதி கிடைத்தால் கேட்கவும் வேண்டுமா? விவசாயத்தில் புரட்சிகரமாக முன்னேறிக்கொண்டே வந்தார்கள். அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்க்காமலே சுயமாக இயங்கக்கூடிய நிலையை அடைந்ததும் கல்லோயா அபிவிருத்திச்சபை அளித்துவந்த உதவிகளை எல்லாம் நிறுத்திவிட்டு 40 கிராமங்களைக் கொண்ட இடதுபுறப் பிரதேசத்தை அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் ஒப்படைத்துவிட்டு வலதுபுறப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் வேலையில் சபை ஈடுபட்டு வருகிறது.

குடியேற்ற விவசாயிகள் விவசாயத்தோடு மட்டும் நிற்காமல் தங்களுக்கு வழங்கப்பட்ட மேட்டுநிலத்தில் பலவகையான மேட்டுநிலப் பயிர்களைச் சாகுபடி செய்து பார்த்தார்கள். சிகரெட் புகையிலை, சுருட்டுப் புகையிலை, மிளகாய் ஆகிய மூன்றும் சாகுபடி செய்வதிலே நல்லதோர் சாதனையை நிலைநாட்டியிருக்கிறார்கள். இந்த மூன்று மேட்டுநிலப் பயிர்களும் ஆரம்பத்தில் மிகவும் குறைந்த அளவே சாகுபடி செய்தார்கள். இந்த மூன்றுக்கும் தான் நல்ல கிராக்கி ஏற்பட்டது. இதனால் தங்களின் மேட்டு நிலம் பூராவும் மூன்று பயிரையும்தான் சாகுபடி செய்து வருகிறார்கள். நிலமும் அதற்கு ஏற்றதாக இருந்துவருகிறது. கடந்த நான்கு வருடத்துக்குள் இந்த மூன்று பயிரும் நல்ல செல்வாக்கைப் பெற்றது. விசேஷமாக சிகரெட்புகையிலை உற்பத்தி அதிகரித்தமையினால் சிகரெட் தொழிற்சாலை ஒன்றை அம்பாறையில் ஆரம்பிப்பதற்கான எல்லா ஆரம்பவேலைகளையும் கல்லோயா அபிவிருத்திச் சபை கடந்தவருட ஆரம்பத்தில்மேற்கொண்டது. ஆனால் பின்பு அதுபற்றி என்ன ஆயிற்று என்பதே தெரியாத நிலையில் இருக்கிறது. கல்லோயா அபிவிருத்திச்சபை ஏற்கனவே திட்டமிட்டபடி அம்பாறையில் ஒரு சிகரெட் தொழிற்சாலையை ஆரம்பித்தால் மேலும் பெருந்தொகையான ஏக்கர் நிலங்களில் குடியேற்ற விவசாயிகள் சிகரெட்புகையிலை சாகுபடி செய்வதற்கு வசதியாக இருக்கும். அத்தோடு நாட்டில் இருந்து வரும் வேலையில்லாத்திண்டாட்டத்தின் ஒரு பகுதியை இத் தொழிற்சாலையினால் தீர்த்து

(3-ம் பக்கம் பார்க்க)

புராதன இலங்கையும் தமிழரும்

—வித்துவான் கா. பொ. இரத்தினம் (எம். ஏ., பி. ஓ. எல்.)—

உலகில் மற்றெந்த தேசங்களையும்விட எங்கள் இலங்கைக்குத்தான் நீளமான பெயர் பட்டியல் உண்டு. இரத்தினத்துவீபம், இலங்காதீவு, லங்கா, ஈழமண்டலம், ஸ்ரீலங்கா, ஈழம், சாஞவதீவு, சிங்களம், சிலோன், சீலதீவு, சீயழிதீவகம், சீலம், சீலதீவம், செரந்தீப, தம்பபண்ணை, தாமரபண்ணை, மும்முடிசோழமண்டலம் என்பன நமதுநாட்டுக்குள்ள பெயர்களில் முக்கியமானவை. இன்னும் பல உள.

இப்பெயர்களெல்லாம் அக்காலம் முதலாக கல்விமான்கள், புலவர்கள் மத்தியில்மட்டுமன்றி மேற்கு, கிழக்கு தேசங்களிலிருந்து இங்குவந்த வர்த்தகர்கள் மத்தியிலும் வழக்கிலிருந்தன. இப்பெயர்கள் அனைத்திலும் "லங்கா" என்ற பெயரே மிகத்தொன்மையுடையதென்றும் வால்மீகி இராமாயணம் போன்ற பழம்பெரும் நூல்களில் இப்பெயர் காணப்படுவதாயும் சொல்லப்படுகிறது. இலங்கை வாழ் சிங்களவர், தமிழர் மத்தியில நாளது வரை சாதாரணமாக வழக்கிலிருந்து வரும் பெயரும் இதுவாகும். கி. மு. ஐந்தாம் நூற்றுண்டில் அதாவது இற்றைக்கு இரண்டாயிரத்துநானூறு ஆண்டுகளுக்கு முன்னதாக இந்நாட்டின் தொல்குடிமக்களாயிருந்த இயக்கரைவிஜயன் கைப்பற்றிய போது அவர்களின் இராஜதானி இலங்காபுரிஎனப்பெயர் பெற்றிருந்தது.

வால்மீகி இராமாயணத்தில் இலங்கை பற்றியும் இலங்கையை ஆண்ட வீர இராவணன் பற்றியும் இராமனிடம் அவன் தோல்வியுற்றது பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது. இராமனின் கதை ஆதாரமற்றதென்றும் இராம இராவண யுத்தம் உண்மையில் ஆரியருக்கும் திராவிடருக்குமிடையில் நடைபெற்ற யுத்தமே என்றும் பலர் கருதுகிறுர்கள். அது எப்படியிருப்பினும், இராமாயணத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் நிலம், நகர், ஆறு, கடல் என்பன இருந்திருப்பதை யாரும் மறுக்கவில்லை. ஆதலால் இராமாயணத்தில் இலங்கையைப் பற்றிக்கூறியுள்ள கூற்றுகளை 'பொருந்தாக் கூற்றுகள்' என ஒதுக்கிவிடுதல் கூடாது. இலங்கை ஒரு பெரியதேசமாக அதில் கூறப்பட்டிருப்பினும், இந்தியாவுக்குத் தெறகே அந்நாடு இருந்ததென்பதும் இராமாயண காலத்தில் இருநாடுகளும் ஒரு தொடுகடலினால் பிரிக்கப்பட்டிருந்த தென்பதும் ஒப்புக்கொள்ளுதற்குரியது. இராமாயணம் மட்டுமன்றி மகாபாரதம், புராணங்கள் ஆகிய பழையநூல்களும், இதை ஆதாரப் படுத்துகின்றன. இவற்றுடன், இலங்கை இந்தியா இருநாடுகளிலும் நெடுங்காலமாக மக்களிடையே வழங்கிவரும் கிராமியவரலாறுகளும் இராமாயணகால இலங்கையின் ஒரு பகுதியே இன்றைய இலங்கை என்பதை சந்தேகத் துக்கிடமில்லாமல் எடுத்தியம்புகின்றன.

இருநாடுகளுக்கும் மத்தியில் உள்ள பாக்சலசந்தி மீதாக அதன் ஒரு மூலையில் அமைக்கப்பட்டிருக்கும் இன்றைய 'பாம்பன் பாலம்' வரை கடந்த நெடுங்காலமாக இராமர் அணை என்றும் சேது அணை என்றுமே அழைக்கப்பட்டுவந்திருக்கின்றது, பழைய காலத்து சேது அணைமீதே பாம்பன் பாலம் பிற்காலத்தில் நிறுவப்பட்டதென்று சொல்வார்கள். இவ் அணைக்கட்டுப் பாலமானது, எங்கள் நாடு புராதன காலத்தில் இந்தியாவுடன் கொண்டிருந்த பிணைப்பை எடுத்துக்காட்டும் ஒப்பற்ற சின்னமாக மிக முக்கியத்துவமுடையதாய் இருந்து வருகிறது.

இராமன் சைன்யம் தென் இந்தியக் கரையிலுள்ள தனுஷ்கோடியிலிருந்து சேது அணை மீதாக இலங்கை சேர்ந்ததென இராமாயண வரலாறு கூறுகின்றது. இராமன் தனுஷ்கோடி வழியாகத்தான் இலங்கைக்குள் பிரவேசித்தாரென்பதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அகநானூறு என்ற சங்க இலங்கியததலும் தெளிவான சான்று காணப்படுகிறது. அகநானூறு 18 வது செய்யுளில் இது பற்றிக் கூறப்பட்டுள்ளது. இலங்கை மீது படையெடுக்கும் சித்தமாக இராமன் அங்கு பாசறை அமைத்து ஓர் ஆலமரத்தின் கீழ்தங்கி ஆலோசனை செய்த நாளில் அம்மரத்தில் பறவை இனங்கள் கூடிப் பேரிரைச்சல் எழுப்பாதவாறு அவைகளை விரட்டினுரென்று அப்பாடல் கூறுகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் இதுமாதிரி நிகழ்ச்சிகளை அவதானித்தார்களென்பதற்குஇப் பாடல்ஒரு சான்று.

மேலும், தென்னிந்தியக் கரையில் உள்ள இராமேஸ்வரம் என்ற சிவாலயமும் இலங்கையிலுள்ள முன்னேச்சுரர் சிவாலயமும் இராமபிரான் வழிபட்ட திருப்பதிகளெனப் புகழ்பெற்றுள்ளன. இராமேச்சுர சிவாலயத்தை இராமனே நிறுவினுன் என்பதற்கு தேவாரப் பதிகங்களில் சான்றுகள் உள்ளன. இலங்கையில் திருக்கோணமலையில் உள்ள சிவாலயமும் இராவணன் தொடர்புடைத்து. சிங்களர் வசிக்கும் பகுதியும் தமிழர் வசிக்கும் பகுதியுமான இலங்கையின் இவ்விரு பகுதிகளையும் தவிர, இராமகாதையை இலங்கையுடன் தொடர்புபடுத்தும் கட்டுக்கதைகளும் இடங்களின் பெயர்களும் உள்ளன. இராவணனின் தம்பி விபீஷணனை சிங்களவர் இன்றும் வழிபட்டுவருகின்றனர்.

பழைய தமிழ் இலக்கியங்களில் 'ஈழம்' என்ற பெயரும் 'இலங்கை' என்ற பெயரும் இந்நாட்டுக்குத் தரப்பட்டிருக்கினறன். இலங்கை மிகப் பழையதொரு நாடென்பதை அக்காலத்து தமிழர் உணர்ந்திருந்தமை தெரிகிறது. 'தொன்மைவாய்ந்த நாடு' என இதைக் குறிப்பிட்டு அக்காலத்தில் வசித்த தமிழ்ப் புலவர்கள் பலவேறு சந்தர்ப்பங்களில் பாடியிருக்கிறுர்கள். சிறுபாணாற்றுப் படை, சிலப்பதிகாரம், ஆசிரியமாலை என்ற நூல்களைப் பாடியவர்கள் 'தொன்மாவிலங்கை' என்றும் 'தொல்விலங்கை' என்றும் 'பெருமுத்திலங்கை' என்றும் புகழ்ந்து பாடியிருக்கிறுர்கள். இலங்கை என்ற பெயருடைய ஒரு நாடு தென்னிந்தியாவில் இருந்ததை 'சிறுபாணாற்றுப் படை'யில் தெளிவாகக் காணலாம்.

'புறநானூறு'என்றஇலக்கிய நூலிலும் இலங்கைபற்றி அதன் 176வது 379வது செய்யுள்களில் கூறப்பட்டிருக்கிறது.

முற்காலத்தில் தென்னிந்தியாவில் வசித்த தமிழ் குடிமக்களுக்கு இலங்கை என்று ஒரு நாடு இருந்தது தெரிந்திருந்ததென்பதுடன் அந்நாட்டின் நினைவாகத் தங்கள் நாட்டில் ஒரு பகுதிக்கே அதன் பெயரைச் சூட்டுமளவில் இருநாடுகளுக்குமிடையே நெருங்கியபிணைப்பு இருந்துவந்திருக்கிறதென்பதும் புலப்படுகிறது. ஆகவே, தமிழகத்துக்கும் இலங்கைக்கும் நேரடியான போக்குவரவு, வர்த்தக, குடியேற்ற உறவுகள் இருந்திருக்கவேண்டும்.

'சிறுபாணாற்றுப்படை' என்ற இலக்கிய நூல் குறிப்பிடும் 'மாவிலங்கை' அல்லது 'இலங்கை'யின் குடிமக்களான 'ஓவியர்'எனப்பட்டோர் அக்காலததில் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் வசித்த நாகர் இனத்தின் ஒருபகுதியினராகவே இருக்கவேண்டும்எனக் கருதப்பட்டது. நாகர்கள் இலங்கையிலிருந்து தென்னிந்தியா சென்று அங்கு மக்களுடன் கலந்து வாழ்ந்தபோது தங்கள் தாய்நாட்டின் நினைவாகத் தாங்கள் குடியேறிவசித்த பகுதிகளுக்கு இலங்கையின் பெயரை இட்டிருக்கக்கூடும். பண்டைநாட்களில், இவ்வாறெல்லாம் தென் இந்தியாவிலிருந்து இலங்கைக்கும், இலங்கையிலிருந்து தென்னிந்தியாவுக்குமாக இருதேசத்தினரும் பரஸ்பரம் குடியேறிவசித்தார்கள் என்பதற்கு சிலாஸனச் சான்றுகள் உட்பட பல சான்றுகள் உள்ளன.

இலங்கை, வடமொழியில் 'லங்கா' என்று குறிப்பிடப்படுகிறது. இவ்வார்த்தை தமிழிலிருந்தே பெறப்பட்டதாயிருக்கலாம். இலங்கை என்ற வார்த்தை தமிழில் உள்ள 'இலங்கு' என்ற சொல்லை அடியாகக் கொண்டு பிறந்ததாகும். இலங்கு என்பது 'பிரகாசிக்கும்' என்று தமிழில் பொருள்படுகிறது. சமஸ்கிருதத்திலுள்ள 'லங்கா' என்ற சொல்லும் இதே பொருளையே கொண்டிருக்கிறது. இலங்கையைக் குறிப்பிடும் மற்றொரு தமிழ் இலக்கியச்சொல் 'ஈழம்' என்பது. ஈழம் என்றுல் பொன். இந்நாடு பொன்னெளிர் பூமியாகப் பிரகாசிததனுல் இப்பெயர் அதற்கு ஏற்பட்டிருககலாம் இலங்கை, ஈழம் ஆகிய இவ்விரு சொற்களும் ஒருமித்த தொனியும் பொருளும் உடையதாயிருப்பதால் ஈழம் என்பதே நாளடைவில் இலங்கையாகத் திரிபுற்றது எனவும் கொள்ளலாம். இந்துக்கள் சீயாளிதீவம், சீலதீவு என இலங்லகக்குப் பெயரிட்டு அழைததிருக்கிறுர்கள். ஈழம் என்றபெயரே இப்படி ஆகியிருக்கவேண்டும் என நம்பலாம். மேற்குநாட்டினர் செலிகோவ், செலன், சிலோன் — ஆகிய பெயர்களை இந்துக்கள் வழங்கிய இவ்விருவார்த்தைகளைக்கொண்டே ஆக்கியிருக்க வேண்டும்.

ஈழம் என்ற சொல் பழைய தமிழ் இலக்கியங்களிலும், இற்றைக்கு 2250 ஆண்டுகளுக்கு முற்பட்ட தென்னிந்தியகுகைச் சிலாசனம் ஒன்றிலும் காணப்படுகிறது. அக்காலம் முதலாக இந்நாள் வரை இலங்கையை ஈழம் என்றபெயராலும் தமிழர் அழைத்து வந்திருக்கின்றனர். சோழர், பாண்டியமன்னர்கள் காலத்து சிலாசன கல்வெட்டுகளில் ஈழம், லங்கா என்ற இரு சொற்களுமே கலந்து உபயோகிக்கப்பட்டிருக்கின்றன.

தொல்குடிமக்கள் யார்?

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுககு முன்னரே தமிழர் நன்கு தெரிந்துவைத்திருந்த புராதன இலங்கைக்குரிய தொல்குடிமக்கள் யார்? இது பற்றி கருத்து வேறுபாடு இருந்துவருகிறதெனினும், சரித்திரகாலங்களுக்கு முன்னமே இயக்கரும் நாகருமே இலங்கையில் வசித்தார்கள் என்பதற்கு பெருமளவில் சான்றுகள் உள்ளன.

(தொடரும்)

கல்லோயாத் திட்டத்தில்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூர் சிகரெட்டை குறைந்த விலையில் மக்களுக்கு விற்பனவு செய்யவும் முடியும். இதனுல் சிகரெட்டுக்கான வெளிநாட்டுக்குச் செல்லும் பணத்தில் பெரும்பகுதி நமது நாட்டிலே தங்குமல்லவா?

கல்லோயா அபிவிருத்திச் சபை திட்டமிட்டபடி அம்பாரையில் ஒரு சிகரெட்தொழிற்சாலையை ஆரம்பித்தால் இரு வருடகாலத்துக்குள் "கல்லோயாச் சிகரெட்" உபயோகத்துக்குக் கொண்டுவரமுடியும். மூன்று வருடகாலத்துக்குள் சிறந்த லாபத்துடன் வெற்றிகரமாக நடத்தமுடியும். ஏனென்றுல் இலங்கையிலுள்ள சிகரெட் உறபத்தியாளர் கல்லோயாவில் உற்பத்தியாகும் புகையிலையின் பெரும் பகுதியைத்தான் நம்பிக்கொண்டிருக்கிறுர்கள். இந்த நிலையில் அரசாங்கத்தின் சார்பில் ஒரு தொழிற்சாலையிருந்தால் இட்டுபுடடபிரதேசத்திலுள்ள மேட்டுநிலம் பூராவுமே சிகரெட் புகையிலையை குடியேற்றக்காரர்கள் சாகுபடி செய்வார்கள். இதனுல் குடியேற்றக்காரர்கள் விவசாயத்தில் நல்ல பலனைப்பெற வாய்ப்பாக இருக்கும். இதுபற்றி அரசியல்வாதிகளும் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவர முன்வரவேண்டும்.

சில குடியேற்ற விவசாயிகள் சிகரெட் புகையிலையோடு,சுருட்டுப் புகையிலையும் பெருமளவு சாகுபடி செய்துவருகிறுர்கள். இறக்குமதிக் கட்டுப்பாட்டினுல் சிகரெட்டுகளுக்கு ஏற்பட்ட விலை உயர்வினுல் கல்லோயாவில் உற்பத்தி செய்யப்படும் சுருட்டுப் புகையிலைக்கும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் இந்தப் புகையிலையைக்கொண்டு "கோடா" இல்லாத சுருட்டுச் சுற்றப்படுகிறது. இந்தச் சுருட்டு அம்பாரை, மட்டக்களப்பு மாவட்டத்தில் நல்ல செல்வாக்கைப் பெற்று வருகிறது. இதனுல் பலர் சுருட்டுப் புகையிலையிலும் நல்ல கவனம் செலுத்திக்கொண்டு வருகிறுர்கள்.

பணம் படைத்த கனவான்கள் பலர் ஒன்றுசேர்ந்து பெருமளவில் மூலதனத்தைப் போட்டு சுருட்டுச்சுற்றும் நிலையமொன்றை கல்முனையில் அமைத்தால் கல்லோயாப் பள்ளத்தாக்கில் சாகுபடிசெய்யும் சுருட்டுப்புகையிலையோடு, மல்வத்தை, மல்லியத்தீவுப்பகுதியிலும் சாகுபடி செய்பவர்களுக்கு ஊக்கமளித்தால் பெருந்தொகையான உள்ளூரவர்களுக்கு இது ஒரு நிரந்தரமான தொழிலாக இருப்பதோடு பாவனையாளர்களும் மலிவான விலையில் சுருட்டைப் பெறமுடியும். இந்தத் தொழிலைப்பற்றி மிகவும் முக்கியமாக சிந்திக்கவேண்டியவர்கள் தமிழ் பேசும் மக்கள் என்பதை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

புகையிலையைப்போல் மிகவும் அதிகமாக குடியேற்றக்காரர்கள் சாகுபடிசெய்யும் மற்றென்று என்ன தெரியுமா? அதுதான் மிளகாய். இதுவும் பல குடியேற்றக்காரர்கள் தங்களின் மேட்டுநிலத்தில் அரை ஏக்கருக்குமேலும் பலர் சாகுபடி செய்துள்ளார்கள். இவர்கள் சாகுடிசெய்யும் மிளகாய்தான் கல்லோயாப் பள்ளத்தாக்கில் வாழும் மக்களின் உபயோகத்தைப் பூர்த்தி செய்துவிட்டு அக்கரைப்பற்று, கல்முனை, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது,

கல்லோயாக் குடியேற்றக்காரர்கள் தங்களுக்குக் கிடைக்கும் சிறு ஒய்வுநேரத்தைக்கூட வீணைச் செலவுசெய்யமாட்டார்கள். காலையில் வயல்நிலத்துக்குச் செல்வார்கள். வீட்டுக்கு வந்ததும் மேட்டுநிலத்தில் சாகுபடி செய்திருக்கும், சிகரெட் புகையிலை, சுருட்டுப்புகையிலை, மிளகாய் ஆகியவைகளுக்கு வேண்டிய பயனை தண்ணீர வசதிகளைக் கவனிப்பதிலே ஈடுபடுவார்கள்.

கல்லோயாக் குடியேற்றக்காரர்கள் உண்மையிலே சிறந்த விவசாயிகள் என்றுதான் சொல்லவேண்டும். நெற்சாகுபடியிலும், மேட்டுநிலத்தில் புகையிலை வகைகள், மிளகாய் சாகுபடி செய்வதிலும் நல்ல சாதனையை நிலைநாட்டியிருக்கிறுர்கள். இன்று அவாகளின் சிகரெட் புகையிலையை எதிர்பார்த்துக்கொண்டு சிகரெட்கம்பெனிகள் இருக்கின்றன. புகையிலை சுருட்டுச்சுற்றுபவர்கள் முற்பணம் கொடுத்துக் கொண்டு காத்துக்கொண்டிருக்கிறுர்கள். மிளகாய்க்கும் இப்படித்தான். இதனிடையில் அரசாங்கம் கல்லோயாவில்கிடைக்கும் நெல்லை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

கிழகு மாகாணத்தின் ஏனைய பகுதிகளில் உள்ள மேட்டுநிலங்களையும் கல்லோயாக்குடியேற்றக்காரர்கள் பயன்படுத்துவது போல பயன்படுத்த தமிழ்பேசும்மக்கள் முன்வர வேண்டும். இல்லாவிட்டால் இதைப்பற்றி வருந்தவேண்டிய காலமொன்றை தமிழ்பேசும் மக்கள் விரைவில் எதிர்பார்க்க முடியும். கிழக்குமாகாணத்தில் பெருமளவு மேட்டுநிலம் இருந்த போதிலும் அந்த நிலத்தில் எந்தப் பயிர் சாகுபடிக்குஉகந்தது என்று தெரிவு செய்து கண்டுபிடித்துக் கொண்டால் பின் நிறைய ஊதியத்தைப் பெற முடியும். கல்லோயாப்பள்ளத்தாக்கில் குடியேறிய குடியேற்றக்காரர்கள் கடந்த எட்டு வருடத்துக்கு முன்பு ஒருதபால் விலாசம் கூட இல்லாதவர்களாக இருந்தார்களாம். இன்று வங்கியில் கணக்கு வைக்கும் நிலைக்கு விவசாயத்தினுல் முன்னேற்றம் அடைந்துள்ளோம் என்று கல்லோயா குடியேற்றக்காரர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறுர்கள்.

காஸ்மிக் கதிர் ஆராய்ச்சியில் இந்திய விஞ்ஞானிகள்

"காஸ்மிக் கதிர்கள் பற்றியும் அண்டவெளி பற்றியும் இந்திய விஞ்ஞானிகள் நடத்திவரும் ஆராய்ச்சிகள் தரத்தில் உயர்ந்து விளங்குகின்றன" என்று சோவியத் விஞ்ஞானி பேராசிரியர் என். ஏ. டோப்ரொடின் கூறியுள்ளார்.

முக்கியமாக, காஸ்மிக் கதிர்களை பூமி ஈர்த்துக்கொள்வது பற்றி இந்திய விஞ்ஞானிகள் சிறந்த முறையில் ஆராய்ச்சி செய்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். விண்வெளிக் கோள்களின் இடையேயுள்ள சூழலைப் பற்றி இந்திய விஞ்ஞானிகளும் சோவியத் விஞ்ஞானிகளும் அநேகமாக ஒரே விதத்தில் தான் ஆராய்ச்சி நடத்துகிறுர்கள் என அவர் கூறிப்பாராட்டினுர்.

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் சோபகிருது ஆண்டு மாசி மீ 4உ (16-2-64)

ஆக்க முயற்சி வேண்டும்

நாஉ திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாக இருந்த நேரடி மறியல் இயக்கத்தை தமிழரசுக்கட்சியினர் ஒத்திவைத்துள்ளனர். இதற்கான காரணம் விளக்கப்படவில்லை.

"சமீபத்தில் ஏற்பட்ட சில நிகழ்ச்சிகளின் விளைவாகவே" இவ்விதம் செய்யப்பட்டதாகவும் மீண்டும் நடவடிக்கை ஆரம்பிக்கும் திகதி விரைவில் அறிவிக்கப்படுமென்றும் தலைவர் செல்வநாயகம் தெரிவித்துள்ளார்.

இதிலிருந்து இந்த இயக்கம் கைவிடப்படவில்லை என்றும், ஏதோ தற்காலிகமான காரணங்களால் நிறுத்திவைக்கப் பட்டுள்ளதாகவும் விரைவில் மீண்டும் ஆரம்பிக்கப்படக் கூடும் என்றும் ஏற்படுகின்றது.

தமிழர் உள்ளிட்டு பொதுமக்கள் யாரும், மீண்டும் இவ்வித இயக்கம் ஆரம்பிக்கப்பெறவேண்டுமென்று ஆவல் கொள்ளவில்லை. நேரடி இயக்கத்துக்கு அவசியமில்லாமல் எல்லாம் சுமுகமாகமுடிய வேண்டுமென்பதே தேசாபிமானிகளின் மேலான ஆவலும் பிரார்த்தனையுமாகும்.

அவ்விதம் செய்துகொள்ள இப்போது நல்ல தோர் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கிடையிலே நேரடி இயக்கமும் கிளம்புமாயின் நிலைமை எவ்வளவு மோசமாகுமென்பதை அரசாங்கம் மட்டுமன்றி மற்ற எதிர்க்கட்சிகளும் உணர்ந்திருக்கவேண்டும். ஆகவே இப்போது தமிழரசுக் கட்சியினர் அளித்துள்ள இந்த மேலான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, மொழி முதலிய பல பிரச்னைகளையும் அமைதியாகத் தீர்த்துக் கொள்ள தக்க முயற்சிகள் செய்யப்படுமென்றே நம்புகின்றோம்.

இதற்கிடையே தமிழ்பேசும் மக்கள் தங்கள் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள தாங்களே ஆக்க முறையில் போதிய முயற்சிகளைச்செய்யவேண்டும். பிறரை நம்பி எதிர்பார்த்துக் கொண்டிருப்பதில் பயனில்லை.

உதாரணமாக இப்போது துணிப்பஞ்சம் ஏற்பட்டுள்ளது. வேட்டிகள் கிடைக்கவில்லை. மகாத்மா காந்தி காட்டிய வழியிலே இங்கேயே பருத்தியை விளைவித்து கதர்த் துணியை உற்பத்தி செய்து கொள்ள ஏன் நாம் தக்க முயற்சிகளைச் செய்யப்படாது? கதர் உற்பத்தி செய்யவேண்டிய அவசியத்தைப் பற்றி இப்போது சிலர் யோசிக்க ஆரம்பித்துள்ளது மிகவும் வரவேற்கத்தக்கது. இந்த நல்ல முயற்சிக்கு கட்சி பேதமின்றி எல்லாரும் ஆதரவளிக்கவேண்டும். இதனால் சுயதேவை பூர்த்தியாவதுடன்நம்மிடையே வேலையில்லாக் கஷ்டமும் குறையும். அரசாங்கம் கூட இதற்குக் குறுக்கே நிற்க முடியாது. நாட்டிற்கு நல்ல வழிகாட்டிகளாக இவ்விஷயத்தில் தமிழர் விளங்கமுடியும்.

சத்தியாக்கிரகம், நேரடிநடவடிக்கை முதலியவற்றை வெற்றிகரமாக நடத்திய மகாத்மாகாந்தி அவர்கள், அதேசமயம் ஆக்க முறையில் திட்டம் தயாரித்து, அதை நடத்தி வைப்பதில் தீவிரமாக ஈடுபட்டார். கதர், கிராமக்கைத்தொழில்கள், தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, இந்து-முஸ்லிம் சமுக ஒற்றுமை முதலிய நிர்மாணத் திட்டத்தைத் தயாரித்து, அவற்றை நடத்திவைத்து, தமது போராட்டத்துக்கு அஸ்திவாரமாக இத்திட்டத்தைப் பயன்படுத்தினர். போராட்டமில்லாத காலத்தில், சும்மா இராமல் இந்த ஆக்கத் திட்டத்திலேயே தமது முழுக்கவனத்தையும் செலுத்தினர். அவர் காட்டிய இந்த மேலான வழியைப் பின்பற்றி, அவர் வகுத்த நிர்மாணத் திட்டத்தை இங்கு நாமும் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் அதிகரித்துவருகின்றது.

பார்லிமெண்ட், சட்டசபைகளில் பிரவேசிக்காமலே, மகாத்மா வெளியிலிருந்து பல மேலான நற்பணிகளைச் செய்யமுடிந்தது நாடு விடுதலை பெற்ற பின்பும், அவர் ஆரம்பித்த இந்த நற்பணிகள் வளர்ந்து மக்களுக்குப் பெரும்பயன் அளிக்கின்றன. இங்கும் நேரடிப்போராட்டம் நிறுத்தப்பட்டுள்ள இச்சமயத்தில், மற்றவர்களை எதிர்பார்த்துக் கொண்டு கைகட்டிச் சும்மா இராமல், ஆக்கமுறையிலே திட்டம் வகுத்து, அதைத் தீவிரமாக நடத்த தமிழ்த்தலைவர்கள் முன்வந்தால், தமிழருக்கு மட்டுமன்றி நாட்டுக்கும் விமோசனம் பிறப்பதாக இருக்கும்.

சைப்பிரஸில் வெடித்த 'எரிமலை'

— 'தூரதர்சினி' —

மத்திய தரைக் கடலின் கிழக்கோரமாக துருக்கிக்கும் கிரீசுக்கும் அநேகமாய் சம தூரத்திலுள்ள சைப்பிரஸ் தீவு, அளவில் மட்டும் இலங்கையை ஒத்ததல்ல. இரண்டும் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து சமீபத்தில் சுதந்திரமடைந்தவை. சைப்பிரஸ் தீவில் கிரீசிலிருந்து குடியேறிய கிறிஸ்தவர்களும் துருக்கியிலிருந்து குடியேறிய முஸ்லிம்களும் வசிக்கிறார்கள். இவ்விரு சமூகத்தவர்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள வேற்றுமைகள் காரணமாக இன்று அங்கே பிரிட்டிஷ் துருப்புகள் காவல் புரியவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த வேற்றுமை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. உலகில் பல இடங்களில் நூற்றாண்டுகளாக புகைந்து கொண்டே வரும்பூசல்கள்எப்பவும் உண்டு. இவ்வெம்மை சில சமயம் கட்டு மீறி வெடித்து கொலை, கொள்ளை, யுத்தம் முதலியவற்றில் கொண்டுவிடும். கிரேக்கருக்கும் துருக்கியருக்கு மிடையேயுள்ள பகைமை மிகவும் தொன்மை வாய்ந்தது. இந்த இனப்பகையானது கடைசியாக துருக்கியின் பழம் பெரும் துறைமுகப்பட்டினமாகிய இஸ்தான் புல்லில் 1955-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கொந்தளித்தெழுந்து சொல்லொணாத நஷ்டத்தையும் துயரத்தையும் சேதத்தையும் உண்டுபண்ணியது. சுமார் 15 லட்சம் மக்கள் வாழும் இஸ்தான்புல் நகரத்தில் அதன் பொருளாதார செல்வத்துக்கு அஸ்திவாரமாயிருப்பவர்கள் கிறீசிலிருந்து குடியேறி தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வரும் ஒரு லட்சம் கிறீஸ்தவர்கள். அங்குள்ள பெரும் வியாபார நிலையங்கள் பெரும்பாலும் இவர்கள் கையில் தானிருக்கின்றன. இஸ்தான்புல்லின் பிரதான வீதிகளில் எல்லாம் கிரேக்கரின் கடைகளே காணப்படுகின்றன. இவர்களுடைய வியாபாரக் கெட்டித்தனமும் விடா முயற்சியுடன் கூடிய உழைப்பும் இயற்கையாகவே துருக்கி முஸ்லிம்களிடத்தில் பொறுமையையும் குரோதத்தையும் வளர்த்தன. பலவாண்டுகளாக துருக்கி பிரஜைகளாக வாழ்ந்தபோதிலும் இவர்கள் தங்கள் மொழியையும் மதத்தையும் மிக்க வாஞ்சையுடன் பேணிப் பாதுகாத்து வந்தனர். வானளாவிய பெரும் கிறிஸ்தவ ஆலயங்கள் இஸ்தான்புல் நகரமெங்கும் பொட்டிட்டு விளங்கின. ஒரு சிறுபான்மை இனம் இப்படிசெழிப்பாக வளர்ந்தோங்கிவருவது பெரும்பான்மை இனத்திடையே பொறுமைத்தீயை நெய்விட்டு வளர்ப்பதுபோலிருந்தது.

சைப்ரஸ் தீவு சம்பந்தமாக அப்பொழுது துருக்கிக்கும் கிரீசுக்குமிடையே மனக்கசப்பு ஏற்பட்டிருந்தது. ஒருநாள் சில முஸ்லிம் சர்வசாலாக்கள் மாணவர்கள் கிரீசுக்கெதிராக ஓர் ஆர்ப்பாட்டம் நிகழ்த்தினார்கள். பலவித கோலாகலங்களைக் கூறிக்கொண்டு அவர்கள் நிகழ்த்திய ஊர்வலம் அமைதியாகவே போய்க்கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் ஒரு பத்திரிகை தலையங்கம் தீட்டி கூச்சலிட்டது; 'கிரேக்கபயங்கரவாதிகள் கமால் பாஷாவின் இல்லத்தைத் தாக்கினர்'. முதலாவது உலக யுத்தத்துக்குப் பின் கால் ஒடிந்து போயிருந்த துருக்கியை மறுபடியும் தலை நிமிர்ந்து நிற்கச் செய்தவர் துருக்கியின் தந்தை எனப் போற்றப்படும் கமால் பாஷா. அவர் வாழ்ந்த இல்லம் இன்று ஒரு தேசிய க்ஷேத்திரமாக வணங்கப்படுகிறது. அவ்வில்லத்தின் மீது கிரேக்கர் குண்டு வீச முயன்றார்கள் என்று அப்பத்திரிகை ஒரு செய்தியை வெளியிட்டது.

அவ்வளவு தான் தாமதம். அடுத்த ஆறுமணி நேரமாக இஸ்தான்புல் நகரத்தில் இனவெறி கோரதாண்டவம் புரிந்தது. நகரத்தின் எல்லாப் குதிகளிலும் துருக்கியர் கூட்டம் கூட்டமாகத் திரண்டனர். 'கிரேக்கனைக் கொல்' என்ற துவேஷ கோஷம் நச்சுக்காற்றுப்போல் பரவியது. கோடரிகளும் அலவாங்குகளும் சீமெந்து அடைத்த இரும்புக் குழாய்களும் எங்கிருந்தோ லொறிகளில் வந்து சேர்ந்தன. கிரேக்கர்கள் தங்கள் கடைகளையும் வர்த்தக நிலையங்களையும் அடைத்துப் பூட்டிவிட்டு உயிரைக் காப்பாற்ற முயன்றனர். கடைகளும் வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன. கிறிஸ்தவ ஆலயங்கள்கூட இனவெறிக்குப் பலியாகின. சுமார் 50 000க்கும் மேற்பட்ட துருக்கியர், கையில் பலவிதமான ஆயுதங்களைத் தாங்கிக்கொண்டு கிரேக்க சொத்துக்களை நாசம்செய்தனர். ஆறுமணி நேரத்துக்குள் 2000 வீடுகளும் 4000 கடைகளும் இடித்து நொருக்கப்பட்டு தீக்குப் பலியாகின. 60க்கு மேற்பட்ட ஆலயங்களும் தரைமட்டமாகின. இதனால் உண்டான நஷ்டம் 35 கோடி பவுண் (£) என்று பின்னல் கணிக்கப்பட்டது.

இந்தக் கோர சம்பவத்துக்கு இன்னார்தான் மூலகாரணம் என்று குறிப்பாக சொல்லமுடியவில்லை. கலவரம் தொடங்கியபோது துருக்கியின் பிரதம மந்திரி ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். அவருடைய உத்தரவில்லாமல் இஸ்தான்புல் கவர்னர் எதுவும் செய்யமறுத்துவிட்டார். மாலை 6 மணிக்கு ஆரம்பித்த கலகம் இரவு 11 மணியளவில் பிரதம மந்திரி நகருக்கு திரும்பி அவசரகாலச்சட்டமும் இராணுவச் சட்டமும் பிறபித்த பின்னர்தான் மெல்லவாக அடங்கியது.

கொம்யூனிஸ்ட் கட்சிக்காரர்தான் இக்கலகத்துக்கு தூபம் போட்டார்கள் என்றும் அச்சமயம் கூறப்பட்டது. ஆனால் கைதுசெய்யப்பட்ட 5000 குழப்பக்காரரில் மிகச் சிலரே கொம்யூனிஸ்ட் தொடர்புடையவர்கள் என்று ருசுப்படுத்தப்பட்டது. துருக்கியில் பலர் தாம் இன்ன செய்வதென்று தெரியாமல் செய்துவிட்டோமென்று பின்னல் வருத்தப்பட்டார்களாம். மனதுக்குள்நெடுங்காலமாக புகைந்துகொண்டிருக்கும் அனல்எந்தச் சமயத்தில் வெடித்து கோலாகலக்கும் என்று எவராலும்கூறிக் கொள்ள முடியாது. மனிதர்களை காட்டுமிராண்டி வெறியர்களாக்கும் இனப்பகையை ஒழிப்பதற்கு இரு பக்கத்திலும் சகிப்புத்தன்மை இருக்கவேண்டியதுதான் மிகவும் அவசியம்.

இஸ்லாம் கூறும்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கினர். அரசியலில் ஒத்துழைத்தவர்களுக்கெல்லாம் சேர்பட்டம் கொடுத்தனர். இதை விபரிக்கில் கட்டுரை நீண்டுவிடும்.

பரிசுத்த குர் ஆன் ஷரீபின் வாக்கியங்களை முஹம்மதுநபி (ஸல்) அவர்களின் பொன் மொழிகளும் இப்பிற மதவாதிகள் கூற்றைப் பொய்யாக்குவனவாக இருக்கின்றன என்பதற்கு நான் தலைப்பில் கூறிய வாக்கியங்கள் சான்றுகூறிநிற்கும். மேலும் இஸ்லாம் தோன்றியகாலமுதலாய் இஸ்லாமிய சமதர்மம் முஸ்லிம்களிடையே பரவியது. இஸ்லாத்தின் சக்காத் என்னும் திட்டம் இதற்குச் சான்றுகூறும் இஸ்லாத்தின் முதலாளித்துவமாவது கம்யூனிஸமாவது இல்லை.

இஸ்லாம் புரட்சி மூலமாகவோ சமதர்மத்தைச் செயல்படச் செய்யவில்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் மேலான பிரசாரம் மூலமாகவே செய்து மக்கள் எல்லோரையும் தங்கள் சமதர்மக் கொள்கையில் சேர்த்துவிட்டார்கள். அரபி மக்கள் பட்டணங்களில் வாழ்ந்தவர்களல்லர். தனிக்கூடாரங்களில் வாழ்ந்தவர்கள். அவர்களிடையே பலதரப்பட்ட குழப்பமான எண்ணங்கள் ஏற்பட்டிருந்தன. இவர்களின் வாழ்க்கையைச் சீர்படுத்திய இஸ்லாம், புரட்சியின்றியே வெற்றி பெற்று, இவர்களை ஒரே சமுதாயக்கூட்டுக்குள் வைத்தது. சோஷலிஸத்தைப் புகுத்தி வர்க்க பேதத்தை ஒழித்தது. உலகமெங்கிலும் சமதர்மக் கொள்கைக்கு வித்திட்டது. இன்றைய ரஷ்ய சோஷலிஸமும் இஸ்லாத்தின் சோஷலிஸமும் வேறுபட்டதாக இருக்கலாம். இத்திட்டங்கள் அவ்வக்கால மக்களின் சூழ்நிலைக்கும் சமுக வாழ்க்கைக்கும் ஏற்றதாக இருக்கலாம். எனவேரஷ்யப் பொதுவுடைமைக் கொள்கையையும் இஸ்லாமிய சமதர்மக்கொள்கையையும் ஒப்புநோக்கமுடியாது. ஆனால் இஸ்லாத்தின் சமதர்மம் மதத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது. ரஷ்ய சமதர்மம், மதம் மனிதனுக்கு அபின்என்றுகூறுகிறது. இதை நான் எப்போதும் ஏற்றுகொண்டதில்லை.

இலங்கை மக்களின் வறுமைக்குக் காரணம் நாட்டின் வளமும் பணமும், சிலர் கைக்குள் சிறைப்பட்டுக்கிடப்பதுதான் எனப் பொதுவுடமைவாதிகள் கூறுகின்றனர். இதில் என்ன பிழை இருக்கிறது? செல்வந்தர்கள் தங்களைத் திருத்திக்கொண்டாலொழிய உலக முழுதும் வெகு கெதியில் ஒரே ஆட்சிக்குட்பட்டுவிடும். அதுதான் ரஷ்யப் பொதுவுடமையாகும்.

நீரில் நிழல்

செ து. தெட்சணாமூர்த்தி

மழையும் விட்டு
வெய்யிலிலே
மாவில் இருக்கும்
காகத்தின்
நிழலும் மரத்தின்
கீழ் நிற்கும்
நீரில் நன்றாய்த
தெரிகிறதே.

மேலே உள்ள
இலையெல்லாம்
மிகவும் நீரில்
வினங்கிடவே
மாலை நேரம்
வானத்தில்
மஞ்சள் வெய்யில்
தோன்றியதே.

உலகமேடை

டி.எம்.எம்

சக்ளா வாதம்

ஐ. நா. பாதுகாப்பு சபையில் காஷ்மீரக் காட்சி 110வது தடவையாகத் திரையிடப்பட்டபோது, அதில் காஷ்மீரின் கடுங்குளிரும், பசும் குன்றுகளும், நீலத் தடாகங்களும், வெள்ளிப் பனிமலைகளும் இடம் பெறவில்லை. பதிலாக, சீதோஷ்ணம் ஒரே சூடாய் இருந்தது. இரு அணிகள் அங்கு துவஜயுத்தம் புரிந்து கொண்டிருந்தார்கள். பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி ஸல்பிகார் அலிபூட்டோவும், இந்தியக் கல்விமந்திரி மொகம்மதலி கரீம் சக்ளாவுமே அவர்கள்.

திரு. பூட்டோ இந்தியாமீது சூடான பாணங்கள் தொடுத்துக் கொண்டிருக்கையில், திரு. சக்ளா வாயிலிருந்த சிகரெட்டைப் புகைத்தபடியே எதிரியை எடைபோட்டுக் கொண்டிருந்தார். மொத்தமான பிரேம்போட்ட மூக்குக் கண்ணாடி வழியாக அவரது கூரிய விழிகள் தென்பட்டன வாயினும், புகைப்படலம் அதை ஓரளவு மறைத்துவிட்டிருந்தது. காஷ்மீரின் மூடுபனிக் காட்சிகளும், தற்போதைய நிலையின் அக்கினிச்சுவாலையும் அதில் பிரதிபலித்தன.

திரு. சக்ளா, புதுடில்லியிலுள்ள தமது வாசஸ்தலத்தில் ஒருமுறை சிகரெட்பிடித்துக் கொண்டிருந்தார். அதை ஒரு தமிழ்நாட்டுப் பத்திரிகை படம் பிடித்துப் பிரசுரித்து, "இப்படிச் செய்யலாமா? ஒரு கல்வி மந்திரி வாயில் சிகரெட்டை வைத்திருந்தால் நாட்டின் பண்பு என்னாவது" எனக் கேட்டு, ஒருபக்கம் முழுதும் தலையங்கம் எழுதியிருந்தது. நல்லவேளையாக சக்ளா போன்ற உயர்வட்டாரத்தைக் கவரக்கூடிய அளவு அப்பத்திரிகை அவ்வளவு பிரபலமானதல்ல. ஆனால் சிகரெட்டை ஊதினால் தான் சக்ளாவுக்கு செயல்திறன் அதிகம் ஏற்படுகிறது என்பது உண்மையாய் இருக்கலாம்போல் தெரிகிறது. இந்தியக் கல்வி இலாகாவில் அவர் மேற்கொண்டிருக்கும் வேலைகளும், பாதுகாப்புச்சபையில் அவர் நிகழ்த்தியிருக்கும் வாதமும் இதற்குச் சான்றாக விளங்குகின்றன.

பிரதமர் நேரு தொடர்ச்சியாகப் புகைபிடிப்பவர். தமது அலுவலகத்தில் தான் அவர் அதிகமாகப் புகைக்கிறார். வெளி நிகழ்ச்சிகளில் புகைபிடிப்பது குறைவு. எனினும் அவரை அறியாமலே புகைப்படக்காரர்கள் படங்களை எடுத்து வெளியிட்டிருக்கிறார்கள். அவரது உணவு, ஐரோப்பிய முறையானது. ஐரோப்பியர் புசிக்கும் எல்லா உயிரினங்களையும் அவரும் புசிக்கிறார். இருந்தும்கூட, "இந்திய நாட்டின் பண்பு" என்னாவது என்று எவரும் கேட்டதில்லை. காலஞ்சென்ற பெருந்தலைவர் மௌலானா அபுல்கலாம் அஸாத்தும் சங்கிலித்தொடர் போல் புகை பிடிப்பவர். உயர்தர காங்கிரஸ் தலைவர்களில் புகைபிடிப்பவர்கள் இன்னும் சிலர் உண்டு. எனினும் தனிப்பட்ட சொந்த விஷயங்களில் எவருக்கும் அக்கறை இருக்கமுடியாது. அவர்கள் நாட்டுக்குத் தங்கள் பணியை எவ்விதம் நிறைவேற்றுகிறார்கள் என்பதே முக்கியம்.

திரு. மொகம்மதலி கரீம் சக்ளா பம்பாய் ஹைகோர்ட் நீதிபதியாய் இருந்து ஓய்வு பெற்றவர். பின், அவர் லண்டனில் இந்திய ஹைகமிஷனராய் இருந்தார். நாட்டிலேயே சிறந்த வாதத்திறமைபெற்றவர்களில் ஒருவர். கல்வி மந்திரி பதவியைஏற்ற குறுகிய காலத்திற்குள்ளாகவே தமது இலாகா விவகாரங்களைப் பூரணமாக அறிந்து அதைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விட்டார். கல்வி இலாகாவில் உபயோகமற்றதெனத் தாம் கருதிய 50 கமிட்டிகளைக் கலைத்து அனாவசியச் செலவுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார். நாட்டின் கல்வி சம்பந்தமாக புதிய யோசனைகளை வெளியிட்டு, அவற்றை அமுல் நடத்தும் பணியிலீடுபட்டிருக்கிறார்.

பாதுகாப்பு சபையின் காஷ்மீர் விவாதத்தில் திரு. பூட்டோ கலந்துகொண்ட போதிலும் விசேஷ பிரதிநிதி எவரையும் அனுப்பவேண்டியதில்லை என்றே முன்பு இந்தியா முடிவுசெய்திருந்தது. விசேஷ பிரதிநிதி ஒருவரை அனுப்பாமலிருப்பதின் மூலம், காஷ்மீர் விவாதத்துக்குத் தாம் அதிக முக்கியத்துவம் அளிக்கவில்லை எனக் காட்டுவதே இந்தியாவின் நோக்கமாய் இருந்தது. தற்போது ஐ. நா. விலுள்ள நிரந்தரப் பிரதிநிதி திரு. சக்கரவர்த்தி இந்தியாவின் கட்சியைத் திறமையாக எடுத்துச் சொல்லக் கூடியவர் என்பதிலும் அது நம்பிக்கை கொண்டிருந்தது. எனினும் கடைசிநேரத்தில் திரு. சக்ளாவை அனுப்புவதெனப் பிரதமர் முடிவுசெய்ததற்கு அரசியல், மனோதத்துவக் காரணங்கள் இருந்தன. சக்ளாவின் வாதமே இதற்குச் சாட்சி.

காஷ்மீர் சம்பந்தமாக ஐ. நா. பாதுகாப்புச் சபையில் இந்தியாவின் கட்சியை இதுவரை எடுத்துரைத்த விசேஷப் பிரதிநிதிகள் அனைவருமே திறமையாகச் செயலாற்றியிருக்கிறார்கள். இவர்களில், நீண்டகாலம் தொடர்ச்சியாக இந்தியாவின் கட்சியை எடுத்துரைத்தவரான திரு. வி. கே. கிருஷ்ணமேனன் அனைவரிலும் சிறந்து விளங்கினார் என்பதில் சந்தேகமில்லை. அவரைப்போல் சூறாவளியும் புயலும் கிளப்பாவிடினும், கண்ணிகள் வைக்காவிடினும், திரு. சக்ளா, பாகிஸ்தானின் குற்றச்சாட்டுக்களை மறுக்கும் விஷயத்தில் ஆணித்தரமாகவும், திறமையாகவும் வாதம் புரிந்திருக்கிறார். அவர் மொத்தம் 2 மணி நேரமே பேசினார். அதைப்படிக்கும் எவருக்கும் அதில் அனாவசியமான வாதங்களைக் காண முடியாமலிருக்கிறது.

இந்தியா மதச்சார்பற்ற நாடு என்பதையும், பாகிஸ்தான் கூறியபடி அங்கு முஸ்லிம்கள் கொடுமைக்கு உட்படுத்தப்படவில்லை என்றும், இந்தியாவில் அவர்கள் உயர் பதவிகள் வகிக்கிறார்கள் என்றும் சபை அங்கத்தினர்களுக்கு உணர்த்துவதில் சக்ளா வெற்றி பெற்றிருக்கிறார். அவர் இந்த உரையை நிகழ்த்திய போது உபஜனாதிபதி டாக்டர் ஸக்கீர்ஹுசெய்ன், இந்திய ஜனாதிபதியின் கடமைப் பொறுப்புக்களைஏற்றிருந்ததும், ஸ்ரீநகரிலுள்ள ஹஸ்ரத்பால் மசூதியில் காணமற்போன புனிதச் சின்னம் மீண்டும் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்ததும் பொருத்தமாய் இருந்து. மேலும், திரு. சக்ளா தாமே ஒரு முஸ்லிமாய் இருந்தது இந்தியாவில் முஸ்லிம்களின் நல்ல நிலையை எடுத்துரைத்தது அங்கத்தினர்களின் மனதில் நன்கு பதிந்திருக்கும் என்று நம்புவதற்கும் இடமுண்டு.

சபையிலுள்ள புதிய அங்கத்தினர்களுக்கும் பிரச்சினை நன்கு புரியும்படி செய்வதற்காக, அவர் காஷ்மீர் பிரச்சினையின் ஆரம்பத்தை சுருக்கமாகவும் தெளிவாகவும் தொட்டிருக்கிறார். திரு. சக்ளா சட்டவல்லுனராதலால், காஷ்மீர் இந்தியாவுக்குச் சொந்தம் என்பதை நிரூபிக்க சட்ட ரீதியான காரணங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

காஷ்மீர் யாருக்குச் சேர வேண்டும்; எந்தக்கட்சி நியாயமானது என்பதை இங்கு நாம் கூறமுன்வரவில்லை. தமது கட்சியை திரு. சக்ளா எவ்வளவு திறமையாக எடுத்துக் காட்டியிருக்கிறார் என்பதையே இங்கு குறிப்பிடுகிறோம். காஷ்மீர் பிரச்சினைபற்றி இபபத்தியில் ஏற்கனவே பல தடவைகளில் விரிவாக எழுதப்பட்டிருப்பதால், அதன் அரசியல் சரித்திரத்தை மேலும் வளர்ப்பதற்கு அவசியமில்லை. இது நிற்க, பூட்டோ-சக்ளா சொற்போரில் ஸ்கோர் அடித்தவர் நிச்சயம் திரு. சக்ளா தான் என்பதில் சந்தேகமில்லை. அங்கு சர்வஜன வாக்கெடுப்பை உடனடியாக நடத்த பாதுகாப்பு சபை உத்தரவிடவேண்டும் என பாகிஸ்தான் கோருகிறது. சர்வஜன வாக்குரிமையின் மூலமே காஷ்மீர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என பிரிட்டனும் கூறியிருக்கிறது. ஆனால் இதை ஏற்கமுடியாது என இந்தியா அறிவித்திருக்கிறது.

காஷ்மீரின் தலைவிதி இறுதியாக நிர்ணயிக்கப்படும் முன், சம்பந்தப்பட்ட நாடுகளுக்கும், இதர நாடுகளுக்கும் என்னென்ன தொல்லைகள் ஏற்படுமோ அறியோம். எதுவாயினும் சமீப எதிர்காலத்தில் காஷ்மீர் பிரச்சினை உலகத்தின் கவனத்தை மீண்டும் ஈர்க்கும்படியான நிலைமை உருவாகி வருகிறது என்பது மட்டும் உண்மை.

★

பட்டோடிக்கு ஒரு சபாஷ்

புதுடில்லியில் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெற்ற 4-வது கிரிக்கெட் டெஸ்டில் பாரத கோஷ்டியின் காப்டன் பட்டோடி நவாப் 203 ரன்கள் எடுத்து அவுட்டாகாமல் இருந்தது கிரிக்கெட் ரசிகர்களின் "சபாஷை"ப் பெற்று விட்டது. இங்கிலாந்துக் கெதிராக நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்ட் ஒன்றில், ஒரு இந்தியர் இரண்டு செஞ்சரி எடுத்தது இதுவே முதல் தடவை என்பது கிரிக்கெட் சரித்திரத்தில் ஏற்கெனவே பதிவாகியிருக்கும்.

சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய நகரங்களில் நடைபெற்ற 1-வது,2-வது,3-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளில் இளம் பட்டோடி அவ்வளவாகச் சோபிக்கவில்லை. காப்டனாக இருப்பதற்கு அவருக்குள்ள தகுதிபற்றி ஒரு பிரபல இந்தியப் பத்திரிகையில் குறைகூறப்பட்டிருந்தது. ஆனால் இந்தக் குறையை புதுடில்லியில் நடைபெற்ற 4-வது டெஸ்டில் அவர் போக்கிவிட்டார். அடுத்து கான்பூரில் நடைபெறும் இறுதி டெஸ்டிலும் பட்டோடி வெளுத்துவாங்குவார் என்றே கிரிக்கெட்பிரியர்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறார்கள்.

புதுடில்லி டெஸ்டில் குந்தரம் என்ற ஆட்டக்காரர் 100 ரன்கள் (செஞ்சரி) எடுத்தார். சென்னையில் நடைபெற்ற டெஸ்டில் இதே ஆட்டக்காரர் 192 ரன்கள் எடுத்ததும் குறிப்பிடத்தக்கது. இந்த டெஸ்ட் வரிசையில் இரண்டுதடவை செஞ்சரிகள் எடுத்த பெருமை குந்தரத்துக்கே உண்டு. ஹனுமந்த்சிங்கும் இந்தடெஸ்டில் செஞ்சரி எடுத்து இந்தியாவின் பெருமையைக் காபபாற்றியிருக்கிறார்.

4-வதுடெஸ்டின் இறுதிநாள் ஆட்டத்தில் பட்டோடி அடிக்கடி பவுண்டரிகள் அடித்து ரசிகர்களின் கரகோஷத்தைப் பெற்றார். அவர் அடித்த "சிக்ஸர்"கள் இரண்டு பவுண்டரிகள் 23. இந்தியா-எம். ஸி. ஸி. டெஸ்ட் வரிசையில் இதுவரை எல்லா ஆட்டங்களுமே வெற்றிதோல்வியின்றி முடிவடைந்திருக்கின்றன. கான்பூர் விளையாட்டில்தான் இறுதிமுடிவுதெரியும்.

இங்கிலாந்தில் படித்த போது பட்டோடி நவாப்ஆக்ஸ்போர்ட் கிரிக்கெட்கோஷ்டிக்கு காப்டனாக இருந்து வழிநடத்தியிருக்கிறார். பட்டோடியின் முன்னோர்களும் பெரிய கிரிக்கெட் விளையாட்டுக்காரர்கள். அவர் ராஜகுடும்பத்தைச்சேர்ந்தவர். இந்தியாவின் பிரபல ஆட்டக்காரர்கள் வரிசையில் பல மகாராஜாக்கள் அந்தகாலிருந்தே நாட்டுக்குப் புகழ் தேடித்தந்திருக்கின்றனர்.

கிரிக்கெட் விளையாட்டுக்கு உலகில் அதிகரசிகர்கள் உண்டு. இருந்த போதிலும் அது ஒரு காமன்வெல்த் விளையாட்டாகவே இருந்து வருகிறது. காமன்வெல்த் "பவுண்டரியை" விட்டு அது வெளியே சென்றதில்லை. காமன்வெல்த் நாடாயிருந்த தென்னாபிரிக்கா. காமன்வெல்த்திலிருந்து வெளியேறிவிட்டதால் கிரிக்கெட் உலகத்தில் ஒரு "சிக்ஸர்" ஏற்பட்டிருக்கிறதென க்கூறலாம். ஒரு சில நாடுகளே கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டிருக்கின்றன.

தற்போதைய நிலைமையில் சிறந்த டெஸ்ட் கிரிக்கெட்விளையாட்டு நாடுகளாக கீழ்க்கண்டவைகளை வரிசைப்படுத்திக்கூறலாம்.

ஆஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், நியூஸிலாந்து.

மேற்கிந்தியத்தீவுகள், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் தரம் இப்போது உயர்ந்துவிட்டதால் இந்தவரிசை சிலசமயம் மாறவும் கூடும். இலங்கை போன்ற நாடுகளில் கிரிக்கெட் விளையாடப்பட்ட போதிலும், இந்தநாடு இன்னும் டெஸ்ட் யுகத்தில் பிரவேசிக்கவில்லை.

★

இலங்கை வானொலி

இந்தியா — இங்கிலாந்து டெஸ்டை வருணித்தபோது கூடவே நம் இலங்கை வானொலியின் ஞாபகமும் வந்தது. இப்போது இந்தியாவில் நடைபெற்றுவரும் டெஸ்டுகளை பி.பி.ஸி. ஒலிபரப்புநிலையம் தவறாமல் அறிவித்துவருகிறது. ராய்ட்டர் செய்தி ஸ்தாபனமும் இது பற்றி அதிக அளவு செய்திகளைக் கொடுத்துவருகிறது. இந்நிலையில் இலங்கை வானொலி என்ன செய்தது தெரியுமா? கேளுங்கள்.

சென்னையில் முதலாவது டெஸ்ட் ஆரம்பித்த தினத்தில், அது ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற தென்னாபிரிக்க—ஆஸ்திரேலியா டெஸ்ட் விளையாட்டுக்காரர்களை அறிமுகப்படுத்தி கடைசி ஸ்கோர் என்னவென்பதையும் அறிவித்தது. ஆனால் சென்னையில் டெஸ்ட் ஆரம்பித்ததாகக்கூட ஒரு வார்த்தை சொல்லவில்லை. புதுடில்லி டெஸ்டில் பட்டோடி நவாப் அபாரமாக ஆடி 203 ரன்கள் எடுத்து, அவுட் ஆகாமலிருந்து, விளையாட்டும் வெற்றி தோல்வின்றி முடிவடைந்ததை அது சொல்லாமல், ஆஸ்திரேலியாவிலிருந்து நியூஸிலாந்துக்குச் செல்லும் விளையாட்டுக்காரர்கள் யார் யார் எந்தெந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதை மட்டும் அறிவித்தது. இவ்வளவும் "விளையாட்டுக்கள்" என்ற செய்தித்தலைப்பிலேயே சொல்லப்பட்டன. இதன் அர்த்தம் என்னவென்று தெரியவில்லை. 7000 மைலுக்கப்பாலுள்ள பி. பி. ஸி. யையும், ராய்ட்டர் ஸ்தாபனத்தையும்விட தமது ஸ்தாபனம் தரத்தில் உயர்ந்தது என இலங்கை வானொலி எண்ணிக் கொண்டதா, அல்லது வேண்டுமென்றே இருட்டடிப்பு செய்ததா என்பது தெரியவில்லை.

'புரட்சிவழி' நமக்குப் பொருந்தாக் கூற்று

இஸ்லாம் கூறும் சமதர்மம்

— அல்-ஹாஜ் வி. எம். ஷம்சுத்தீன் —

“வசிக்க ஒரு வீடு, உடுக்கத் துணி, புசிக்கச் சிறிது உணவு இவைகளைத்தவிர, மக்களுக்கு வேண்டியதென்ன? அதிக விலைக்கு விற்க எண்ணி உணவுப் பொருட்களை பதுக்கி வைப்பவர்கள் கொடிய பாவிகள்" என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

இன்றைய (கம்யூனிஸ்ட்) சமதர்மவாதிகளும், இவைகளே மக்களுக்கு வேண்டியவை; இதன காரணமாக ஏழைகளின் துயரை நீக்கிவிடலாம் என்கின்றனர். உண்மைதான். இவைகளைச் செல்வந்தர்கள் கடை பிடித்தாலொழிய, கம்யூனிஸத்தை ஒழித்துக்கட்ட முடியாது. இன்றேல் கம்யூனிஸம் இந்த முதலாளிகளை ஒழித்துக்கட்டிவிடும். இதிலிருந்து, இஸ்லாம் முன்னோடியாக சமதர்மப்பாதைக்கு வழி காட்டியாயிருக்கிறது எனக் கொள்ளலாமல்லவா?

இஸ்லாத்தில் ஜனநாயகமோ, சோஷலிஸமோ இல்லைஎனத் தவறாக விவாதிக்கின்றனர். இடைக்காலத்தில் இஸ்லாமிய சோஷலிஸம் செயலற்றுப் போனதற்கு ஏகாதிபத்தியவாதிகளின் சுரண்டல் கொள்கையும், ஆங்கிலேயரின் முதலாளித்துவக் கொள்கையுந் தான் காரணம். ஆங்கிலேயர்கள், இந்தியாவை அரசாட்சி செய்தபோது இஸ்லாத்தின் சோஷலிஸக்கொள்கை செயல்படவில்லை. வெள்ளையர்களின் முதலாளித்துவக் கொள்கை, முஸ்லிம், ஹிந்துச்செல்வந்தர்களுக்கும், வயல்முதலாளிகளுக்கும் ஊக்கமளித்தது. இவர்கள் காலத்தில்தான், மிராசுதார்கள் பெருகினர். நிலப்பிரபுத்துவத்துக்கு ஆங்கிலேய ஆட்சி ஊக்கமளித்தது. இவர்கள் காலத்தில்தான், இந்தியாவில் ஆங்கிலேயர்களின் பணி ஆட்களாக, கிராமமுன்சீபுகள், கணக்கர்கள், தலையாரிகள் என்போர் செயல்பட்டனர். இவர்களைக் கொண்டே பணவசூல்செய்து, இந்தியாவைச் சுரண்டிக் கொண்டிருந்தனர். அன்றுமுதல் வயலை உழுது கொண்டிருந்தவன், நிலச்சொந்தக்காரர்களுக்கு அடிமைப்பட்டுவிட்டான். வயலை உழுது அதன் வளத்தை நிலச் சொந்தக்காரர்களுக்கு கொடுத்துவந்தவன் கீழானவனாகி விட்டான்! நாளாவட்டத்தில், இவர்கள் பள்ளர், பறையர்களாகிவிட்டனர்!

முஸ்லிம் முதலாளிகள் சிலரோ, பலரோ, இஸ்லாத்தின் சமதர்மப்பாதையில் செயல்படாமல் போனதற்கு முஸ்லிம் ஷேக்மார்கள் (போலிகள்) சிலரோ, பலரோ காரணமாக இருந்தனர். இப்போலி ஷேக்மார்கள் தங்கள் வயிற்றை நிரப்பிக்கொள்ளவும், இந்த முதலாளிகளிடமிருந்து ஏதும் பெற்றுக்கொள்ளவும் நினைத்து, அவர்கள் செயலுக்கு 'ஆமா போட்டனர்.' இவர்கள்போட்ட தூபம், வெள்ளை முதலாளிகளுக்கும் உறுதுணை செய்து வெள்ளையர்கள் செல்வந்தர்களுக்கும், நிலப்பிரபுத்துவமுள்ளவர்களுக்கும் கான்பகதூர், ராவ்பகதூர் பட்டங்கள் வழங்

(4-ம் பக்கம் பார்க்க)

தொடர் கதை

யாத்திரிகன்

"நீலாம்பரி"

கிண்ணகியின் காற்சிலம்பில் பதித்திருந்த முத்துப் பரல்கள் ஈழத்து முத்துகள் தாம் என்று சொல்லுவார்கள். 'தரைகடல் ஓரம் சித்திலம் கொழிக்கும் கோணமாமலை' என்கிறது பாடல். நமது நாட்டிற்கென்றே சிறப்புடைத் தாயிருந்த இரத்தினமும் முத்துகளும் தாமே ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அந்நியநாட்டினரை இங்கு கவர்ந்து வந்தது. அழகுமுத்து, செல்வ முத்து, ஜோதிமுத்து எனவும் நவரத்தினம், செல்வரத்தினம் ஜீவரத்தினம் நாகரத்தினம் என வும் பிள்ளைகளுக்குப் பெயரிட்டு மகிழ்ந்தனர் நம் ஆன்றோர். சரித்திரகாலம் முதலாக 'முத்துக்குளிப்பதோர் தென்கடலாக'ப் புகழ் பெற்று வந்திருக்கிறது நமது நாட்டைச் சூழ்ந்துள்ள சமுத்திரம். நமது சின்னஞ்சிறிய தீவை 'இந்து மகா சமுத்திரத்தில் இலங்கும் ஒரு முத்து' என ஆசையுடன் அழைத்தார்கள் ஐரோப்பியர். பொன்னெளிர் 'ஈழம்' இரத்தினத்துவீபம் மரகதத்துவீபம் மணிபல்லவம் என்று இன்னும் எத்தனையோ பெயர்கள். இரத்தினமும் முத்தும்போல அழகான பெயர்கள்! குபேரன் இருந்து அரசாண்ட அழகாபுரி அல்லவோ இந்நாடு. வாயலுத்துப் போகுமே அதன் வளமெல்லாம் எடுத்தடுக்கி முடிப்பதென்றால்.

∴ ∴ ∴

சேணைக் குடியிருப்புக்குச் சென்றிருந்த தினம் சுவாமியாருக்கு வேண்டிய அங்கிருந்த அவரது அடியார் கூட்டத்தினர் அரிசியும் காய்கறியும் தேனும் கொண்டு வந்து கொடுத்தார்கள். சுவாமியார் அதை அங்கேயே வைத்துவிட்டுப் போய்விடுவாரோ என எண்ணி தங்கள் காணிக்கையை நாம் தங்கியிருந்த சத்திரம் வரை சுமந்து வந்து சேர்ப்பித்துவிட்டுப்போனார் ஒருவர்.

இதற்குப்பின் சுவாமியாரும் நானுமாகத் தினமும் ஒரு வேளை சமையல் செய்வது நமக்கு ஒரு நல்ல பொழுது போக்காகிவிட்டது. ஆற்றங் கரையோரமாக காட்டு விருட்சங்களின் நிழலில் சுவாமியார் அடுப்பு வைத்து நெருப்பு மூட்டி ஒருசிறுபானையில் சோறு ஆக்குவார். நான் அவர் கூட இருந்து காய்கறி வெங்காயம் முதலியன நறுக்கிக் கொடுத்து தேங்காய் துருவிக்கொடுத்து உதவி செய்வேன். பகல் பொழுதில் பெரும் பகுதி இந்தவிதமாகப் போய்விடும்.

ஒரு தினம், சுவாமியார் அடுப்பில் பானையை வைத்து விட்டு அதன் முன்னால் உட்கார்ந்திருக்க, நான் காய்கறி நறுக்கிக் கொடுத்துக் கொண்டிருந்தேன். வெங்காயத்துக்கு தோல்நீக்கிக்கத்தப் படுத்திக் கொண்டிருந்தபோது ஏதோ யோசனையில் ஆழ்ந்து மௌனமாக என் வேலையைக் கவனித்துக்கொண்டிருந்தேன். வெங்காயச் சாறு கண்ணில் தெறித்ததனால் கண் எரிந்து கலங்கியது. இதுமாதிரிச் சந்தர்ப்பங்களில் சுவாமியார் ஏதாவது தமாஷாகப் பேசி உற்சாக மூட்டுவார்.

"என்னசிவக்கொழுந்து,மௌனத்தில் ஆழ்ந்து போய் விட்டீர், கண்ணும் கலங்குகிறது. அப்பன் உமக்கு ஒரு குறையும் வரவிடமாட்டார். நீ அதிகமாய் ஒன்றும் யோசிக்காதே" என்றார் சுவாமியார்.

"அப்படியெல்லாம் ஒரு கவலையும் எனக்குக்கிடையாது, பாட்டா. வெங்காயச்சாறு கண்ணில் பட்டுவிட்டது. அது தானேயல்லாமல் வேறொன்றுமில்லை. வெங்காயத்தைக் குவித்து வைத்து ஒவ்வொன்றாக தோல் நீக்கிக்கொண்டிருந்தபோது எவ்வளவோ நினைவுகள் ஒன்றன்பின்னொன்றாக இந்த வெங்காயத்தினது அடுக்குத் தோல்களைப்போல மனதில் எழுந்தன. பார்க்கப் போனால் மனித சீவியம்கூட முடிவில் இப்படி ஒரு வெறும் நினைவுக்குமிழ்தானே என்று தோன்றிற்று, பாட்டா" என்றேன்.

"எட, மேனை வெங்காயத்தை அப்படியெல்லாம் இதழ் இதழாக முழுக்கவும் உடைத்துப் போட்டுவிடாதே. மேல்தோலை மட்டும் அகற்றினால் போதும். பிறகு நாலு கூறாகநறுக்கி எடுத்துக் கறிக்கு உபயோகிக்கலாம் என்னைப்போல் போட்டு வதக்கினால் கம கமவென்று வாசனை வீசும். அந்த வாசனையுடன் சாப்பிட்டுவிடலாமே" என்று சொல்லிவிட்டு சுவாமியார் எழுந்து அடுப்புக்குச் சற்று எட்டி அமர்ந்து தேங்காய் துருவ ஆரம்பித்தார். அப்பொழுது, "நாம் ஒவ்வொருவரும் நமக்குத் தெரியாமலே பிறருக்காகத்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நீயும் நானும் இக்கக்காட்டில் அனைதப்பிணமாகச் செத்துப்போன பின்னரும் கூட எவனோ ஒருவன் நமக்காக ஒரு நிமிஷம் அனுதாபப் பட்டபோதும் இரண்டு வார்த்தை நம்மைப் பற்றிப் பேசியபோதும் நாம் பிறருக்காகவே தான் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஆகவே, நினைவு என்பது ஒன்றுமில்லாத வெறும் சூன்யமாகி விடுவதில்லை. சென்ற காலத்தைப் பற்றியநினைவிலும் வருங்காலத்தைப் பற்றிய கனவிலும்தானே நாமெல்லோருமே வாழ்ந்து கொண்டிருக்கிறோம் ஊஞ்சலுக்கு அதன் இரண்டுபக்கத்து தாங்கு கயிறுபோல சென்ற காலமும் வருங்காலமும் அமைகிறபோது நிகழ்காலம் என்பது அங்கு நாம் உட்காரும் பலகை ஆகிறது" என்று தேங்காய்த் துருவலியில் புரண்ட தேங்காய் மூடியைப் பார்த்த வாறே கூறினார் சுவாமியார்.

அப்படியொன்றும் ஆழமாக என் சிந்தனை களிஒடிப்பாயவில்லை என்பதைச் சுவாமியாருக்குப் புலப்படுத்துவதற்காக, "ஒருசமயம் எங்கள் கிராமத்திலே ஒருவன் தன் தோட்டத்தில் முழுக்கவும் வெங்காயமாகவே பயிரிட்டான். அவனைப் பற்றித்தான் நினைத்தேன் பாட்டா" என்று சொல்லிவிட்டுதொடர்ந்து "அவன், தான் விதைத்த பயிரை அறுவடை செய்த காலத்தில் ஊரிலே அவனுக்குக் கிடைக்கவில்லை. ஊரெங்கும் கொள்ளை கொள்ளையாக வெங்காயம் பயிரிட்டிருந்தார்கள். அதே சமயம், ஊருக்கு வெளியே எங்கேயும் அதைக் கொண்டுபோகக்கூடாதென்று கண்டிப்பானகாவலும் போட்டிருந்தார்கள். சாக்குச் சாக்காகக் கட்டிவைத்த வெங்காயம் கிடந்து அழுகிப்போவதைப் பார்த்தபோது அவனுக்குத் தன் கையும் காலும் அழுகிப்போவது போலத்தோன்றவே ஒருநாள் அத்தனைசாக்கு மூட்டையையும் ஒருவண்டியில் ஏற்றி காவலையும் மீறிக் கொண்டு போகத்துணிந்துவிட்டான். காவல் அதிகாரி வழி மறித்தபோது அவ்வளவையும் அவன் முன்னால் அவிழ்த்துக் கொட்டிவிட்டு அந்த விறுவிறுப்புடனே போய் நாலுமாதம் மறியல் இருந்து விட்டுவந்தான். அவன் விடுதலையாகித் திரும்பி வருவதற்குள்ளாக எங்களூர் கமத்தொழில் குடியானவர்களின் பிரயாசை வீண்போகாதபடி பாதுகாக்க எல்லாம்ஒழுங்காகி விட்டது. வெங்காயம அழுகி நாற்றமெடுக்கு முன்னமே அதற்குப போதிய விலைகொடுத்து வாங்கிப் பத்திரப்படுத்தி வைக்க காரியப் பொறுப்புள்ள சங்கங்கள் தோன்றி விட்டன" என்று அப்பொழுது நான் நினைத்ததைச் சொன்னேன்.

இவ்வாறு நான் சொல்லி ஒய்ந்தபோது பக்கத்தில் நின்ற மாமரமொன்றிலிருந்து ஒரு கிளி காயும் பிஞ்சுமாக ஒடிந்து விழுந்தது. மரத்தின்மேலே ஒரு வயதான மந்திக்குரங்கு அடுத்த கிளைக்கு தனது பருத்த உடலுடன் வெகு லாவகமாகப் பாய்ந்து போய்க் கொண்டிருந்தது. "பெரியவர் எங்களுக்கு மாங்காய் பறித்துப்போட்டுவிட்டுப் போகிறார். கறி ஆக்கிவைத்த பின் அதில்பங்குகேட்க வந்தாலும்வருவார்" என்றுசொல்லிக் கொண்டே சுவாமியார் எழுந்து சென்று அந்த மாங்கிளையை அப்படியே எடுத்துக் கொண்டுவந்து அதிலிருந்து இரண்டு மாங்காய்களைப் பறித்து என் முன்னால் போட்டார். இரண்டு மாங்காய்களும் உருண்டை வடிவில் ஏதோ காட்டுக்காய்களைப்போல கண்ணுக்குத் தோற்றின. "மனுஷனுக்கும் இந்தப் பிராணிகளுக்கும் என்ன வித்தியாசம் தெரிகிறது" என்று மரத்துக்கு மரம் தாவிச்சென்ற மந்தியை இன்னமும் நோக்கியவாறே நின்ற சுவாமியார் ஆச்சரியப்பட்டார்.

"இவை நமது மூதாதைகள் என்று இக்காலத்தில் படித்தறிந்த வித்துவான்கள் சொல்கிறார்கள். அப்படியானால் அது ஒன்றுதான் வித்தியாசம்" என்றேன்.

"எது,வாலா?" என்று கேட்டுச் சிரித்தார் சுவாமியார்.

(தொடரும்)

குட்டிக்கதை

புதிய ஆசிரியர்

— சுதந்திரன் —

சில வருடங்களுக்கு முன்பு, கிராமப் பள்ளி ஒன்றில் ஆரும் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தேன். எங்களுக்கு விஞ்ஞானப்பாடம் படிப்பிப்பதற்காக ஒரு புதிய ஆசிரியர் வந்திருந்தார். அவர் பட்டினத்துப் பள்ளி ஒன்றில் கடமையாற்றியவராக இருந்ததால் நாகரிகம்மிகுந்தவராகக்காணப் பட்டார்.

எங்கள் விஞ்ஞான ஆசிரியருக்கு கிராமத்துச் சூழ்நிலை பிடித்துக்கொள்வதில்லை. கந்தல் உடைகளுடனும், வாரி விடாத தலையுடனும் வரும் மாணவர்களைக் கண்டவுடன் ஆசிரியர் எல்லோர் மேலும் எரிந்து விழுவார்.

அவர் படிப்பிக்கும் பாடங்களை சிலசமயம் எங்களால் விளங்கிக்கொள்ள முடியாமற் போவதனால், அவர் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிக்க எங்களால் முடிவதில்லை. கோபம் வந்தவுடன் விஞ்ஞான ஆசிரியர் முழு நீளப் பிரம்பெடுத்து எங்கள் முதுகிலே 'சாத்துவார்'.

ஆசிரியரின் அடிக்குப்பயந்தே நாங்கள் விஞ்ஞானப் பாடங்களைப் படித்து வந்தோம். விஞ்ஞானப் பாடத்துக்கு மணி அடித்தவுடன் வகுப்பில் பூரண அமைதி நிலவும்.

ஒருநாள் விஞ்ஞானப்பாடத்துக்கான மணி அடித்ததும் வகுப்பில் அமைதி நிலவியது. ஆசிரியரும் சற்று தாமதமாகவே வகுப்பில் நுழைந்தார். அவர் வந்ததும் மரியாதைக்காக வணக்கம் செலுத்திவிட்டு ஆசனங்களில் அமர்ந்தோம்.

ஆசிரியர் தன் கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துவிட்டு, அதை மேசையில் வைத்ததன் பின்பு படிப்பிக்கத் தொடங்கினர். நாங்கள் எல்லோரும் அவர் படிப்பதையே உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தோம்.

சிறிது நேரம்செல்ல மீண்டும் அவர்மேசையிலிருந்த 'கைக்குட்டையை' எடுத்து முகத்தைத் துடைத்ததும், நாங்கள்'கொல்' என்று சிரித்துவிட்டோம். ஏனெனில் ஆசிரியர் தன் கைக்குட்டையென நினைத்து மேசையிலிருந்த கரும்பலகை துடைக்கும் துண்டால் முகத்தைத் துடைத்துவிட்டார்.

விஷயம் அறிந்தபின்பு ஆசிரியரும் எங்களோடு சேர்ந்து சிரித்தார்.

குற்றமற்ற நல்லவர்களது கூட்டுறவை மறவாது போற்றுக; அதுபோலவே தனக்குத் துன்பக் காலத்து உதவியவர்களுடைய நட்பினைக் கடைப்பிடிப்பாயாக.

—திருவள்ளுவர்

சிறுவர் பூங்கா

விரட்ட வழிகள் இல்லையோ?

— குமார் தனபால் —

எலிகள்! எலிகள்!
எலிகளாம்!
எங்கள் வீட்டில்
புலிகளாம்!
எலிகள் தொல்லை
அதிகமாம் — வீட்டில்
இதனால் கவலை
மிகுதியாம்!

•

தின்னப் பண்டம்
இருந்ததைக்
தீர்த்துக்கட்டி விட்டதாம்!
என்ன செய்வோம்
சொல்லுங்கள்? — தினம்
எங்கள் வயிறு காயுதாம்!

•

ஆளைக் கண்டால் போதுமே!
அவைகள் வலைக்குள்
பதுங்குமே!
மூளை கெட்டுப்
போச்சுதே — அவற்றை
விரட்ட வழிகள்
இல்லையோ?

கலைத்தேவி

புண்ணியம் கணபதிப்பிள்ளை

தேவி அவள் தேவி
தெவிட்டாக் கலைத்தேவி
பாடும் கவி வாக்கில்
ஆடுங் கலைத் தேவி!

•

வீணை கையில் வைத்து
கான மிசைத் தாடும்
வண்ணச் செந் தாமரையில்
வாழுங் கலைத் தேவி!

•

நித்தம் அவள் பாதம்
தப் பாமல் வணங்கி
எக் கலையும் பயின்று
இனிது வாழ்வோம் நாமே.

வீரமாமுனிவர்

— ஏ. பத்மநாதர் —

கிறிஸ்தவ மதக்கொள்கைகளைத் தமிழ் நாட்டில் பரப்பக்கருதி, 200 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கு வந்த பாதிரிமார்கள் தமிழ் மொழியை ஆர்வத்துடன் பயிலத் தொடங்கினர்கள். இயேசு மதக்கொள்கைகளைத் தமிழ் மக்கள் மனதில் பசுமரத்தாணி போலப் பதிக்கக் கருதிய இப்பெரியார்கள் பிழையறப் பேசவும் எழுதவும் விரும்பித் தமிழ் மொழியிலமைந்த சிறந்த நூல்களை ஆர்வத்துடன் ஆராயத் தலைப்பட்டனர். அறநூல்களிற் சிறந்த திருக்குறளையும் அருஞ்சுவை நிரம்பிய பெருந்தமிழ்க் காவியங்களையும் முயன்று பயின்றபொழுது அந்நூல்களின் தெள்ளியசுவை அன்னார் உள்ளத்தை அள்ளுவதாயிற்று. தமிழ் மொழியைப் போதியளவு கற்றுப் போதனை செய்யக்கருதிய அவ்வரிஞர்கள் மதுவுண்டு தேக்கிடும் வண்டுபோன்று செந்தமிழ்த் தேனை மாந்தித்திழைத்தார்கள். இத்தகைய மேலைநாட்டறிஞருள் தலை சிறந்தவரே வீரமாமுனிவர்.

வீரமாமுனிவர் இத்தாலி தேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1680-ம் ஆண்டு பிறந்தார். இவரின் இயற்பெயர் கொன்ஸ்ரன்ரைன் யோசவ் பெஸ்கி என்பதாகும். இவர் இளமையில் சுறுசுறுப்பு, விவேகம், விடாமுயற்சி, தெய்வபக்தி முதலியவற்றில் சிறந்து விளங்கினர். ஆரம்பக் கல்வி கற்றுத்தேறியபின் ரோமைக்கலாசாலை சென்று உயர்தரக்கல்வி கற்றார். கலாசாலையில் இருக்கும்போதே இவர் தேவ அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து யேசு சபையில் சேர்ந்து கத்தோலிக்க மதகுருவானார். குரவரவர்களின் அறிவாற்றலையும் ஆக்கத்தையும் பேச்சுத் திறனையும் ஒழுக்க மேம்பாட்டையும் கண்ட பாப்பரசர் இவரையும் ஆர்னல்ட் என்னும் மற்றொரு துறவியையும் மதபோதனைக்காக இந்தியாவிற்கு அனுப்பினர்கள். இவர்களிருவரும் இந்தியாவின் மேற்குக் கரையிலுள்ள கோவைப்பட்டினத்தில் வந்திறங்கினர் ஆர்னல்ட் என்பார் மலையாள நாட்டிற்குச் சென்றார். மலையாளமும் ஆரியமும் நன்கு கற்று அந்நாட்டில் மதசம்பந்தமான உபதேசம் செய்து வந்தார்.

தமிழ்நாட்டுக்கு வந்த வீரமாமுனிவர் முன்னர் அங்கு போதித்து வந்த "ரோபட்டி தொபிலி" என்பவரைப் பின்பற்றித்தாமும் ஐரோப்பிய உடைகளைக் களைந்து, தமிழரின் உணவையும் உடையையும் மேற்கொள்வராயினர். அவர் தினமும் ஒரு முறையே உண்பார் புலால் உணவை அறவே நீக்கினர். இந்திய நடை உடை பாவனைகளை மேற்கொண்டதால் தமிழர் இவரை ஓர் அந்தணர் என்றே எண்ணினர். சுவாமிகள் தம்மதத்தைப் பரப்பும் நோக்கத்துடன் பல மொழிகளைக் கற்றும் தமிழ் நாட்டின் ஒழுக்கவழங்கங்களைத் தழுவியும் வந்தார். இப்படிச் செய்ததினால் அவர் தம் கருமத்தில் அனுகூலமடைந்ததோடு மக்களின் நன்மதிப்பையும் பெற்றார். அவருடைய போதனைகளைக் கேட்டுப் பலர் அவர் மறையிற் சேர்ந்தனர்.

(அடுத்த இதழில் முடியும்)

உள்ளுணர்வு

ஞாயிறு கதைமலர்

எஸ். அகஸ்தியர்

"தம்பி, பொன்னுத்துரை எட தம்பியோய்..."

"கூ, கூய். என்னனேய்?"

'ம். பாரன், அவர் அங்க நிண்டு என்னணையாம்'

"உங்கயிருந்து என்னுமடா விடுப்புப் பார்க்கிறுய்? வாவன் வந்து சோத்தைத் தின்னன்"

"இந்தா வாறனண. பெத்தாச்சி"

'என்னும் பொரு ஊரவன், கவுண்மேந்தில ஒரு கிளாக்காக இருக்கிறுன்' என்று, புண்ணில் புளிவிட்டு, கிழவி பாலசிங்கத்தைத் தாழ்வாக நிந்தித்துத் தனக்குள்ளே திருப்தி கொண்டாலும், அவன் இரண்டு மூன்று மாதங்களுக்குள் தங்கமலரின் இதயக் குகைக்குள்ளே நிரந்தர இடம் பிடித்துவிடப் போகிறுன் என்பது மட்டும் உண்மை. இதெல்லாம் சின்னம்மாக் கிழவிக்குத் தெரியாது. பொன்னுத்துரை கட்டும்தாலி தங்கமலரின் கழுத்தில் ஏறும் என்று தான் நம்பிக்கொண்டிருக்கிறுள் கிழவி.

கிழவியின் வயிறு, தான் பெற்றவளுக்காக மட்டும் துடிக்கவில்லை; தான் பெற்றவள் பெற்று அனுதையாக விட்டுப்போன பொன்னுத்துரைக் காகவும் எரிந்தது.

'எப்பிடியெண்டாலும், நடேசன் தான் தன்ர கூடப்புறந்த தங்கச்சிக்கு வாக்குக் குடுத்து ரண்டு பேரும் போட்டு வைச்ச 'சாணைக்கூறை'ய எப்பனும் மறக்கான். எல்லாம் என்ர இந்த வயித்தில பிறந்து வந்த த்கள்தான். இதுவும் பேரன்; அதுவும் பேத்தி. ரண்டையும் சேத்து வைச்சிட்டுக் கண்ணை மூடினுத்தான் நான் அங்கால போய் இதைப் பெத்தவளுக்குக் கணக்குக் கொடுப்பன். அல்லாட்டி என்ர இரண்டு கண்ணும் அவியும். ஆரோ வந்து போருனுமே, ஆரது? இருக்காது. சாணைக்கூறை போட்டிருக்கல்லே?'

கிழவிக்கு இந்தச் சாணைக் கூறையை நினைவு கூரும்போது தான் கொஞ்சமாவது மன ஆறுதல் கிடைக்கிறது. ஆனல், சற்றுவேளைக்கு முன் தான், 'பொன்னுத்துரை தங்கமலர் வீட்டுக்கு ஏன் அடிக்கடி போகவேண்டும்? அவனுக்கு இனி அங்கே என்ன உரிமை இருக்கிறது. ஆரோ கிளாக்கனேடு தங்கமலர் கொம்மாளமடிக்கிறுள்' என்றெல்லாம் சொல்லித் தனக்குள் கறுவிக் கொண்டிருந்தாள்.

அவள் பொன்னுத்துரையை கமச்சும் ஒரு வெறும்கொட்டு;

'போனவ தன்னோடை அதையும் கொண்டு போகாம, இஞ்ச எனக்குப் பாரமா விட்டிட்டு அவ போட்டா. அது ஊருக்கு நாணயசீலப்பட்டு அலையுது. ஆம்புளையெண்ட வாக்குத்தன்மை இல்லாட்டியும், நாலுபேர் பேசிற பேச்சை, கொஞ்ச நஞ்சமாலும் தெரிஞ்சு கொள்ள எப்பன் புத்தியும் கூட இல்லையே, கடவுளே இம் மட்டுவயதுவந்துபெண்கொள்ற பெரிய இளந்தாரியா வளந்தும், இப்பயும் அஞ்சு வயதுப் பாலனுட்டம் கதைச்சா ஆர் மதிபினம்? அவ என்ர வயித்தில புறந்து ராசாத்தியாட்டம் இருந்திட்டு, அவ தன்ர வயித்தில வந்த இந்த வலது குறஞ்சதை இப்புடி என்னேட அலைசழிய விட்டிட்டு, கரச்சல் இல்லாமல் போட்டா... கண் கெடுவான் இதையும் ஒரு சாவா எடுக்காமல் இந்த ஊரவையெல்லாம் பழிச்சு நையாண்டியம் பண்ண விட்டிட்டான். இதுவும் என்ர தலையெழுத்து. இதுக்க கிடந்து உத்தரிக்க ஆரால ஏலும்? அப்பு! நீ மேல இருக்கிறியே! அதையும் என்னையும் ஓரவாங்கியமில்லாமல் ஒண்டாக் கூட்டுபு...'

பனைக் கூடலுக்குள் திரிந்து விறகு பொறுக்கி, அடுக்கி, அதை நாரால் இறுக்கி வரிந்து ஒரு கட்டுக்கட்டி, அப படியே கடடோடு தலையில் தூக்கி வைத்துக்கொண்டு நுள்ளான் குடுகுடுப்பு ஓட்டத்தில் கொண்டுவந்த விறகு கட்டை அடுக்களைச் சார்வோடு போட்டுவிட்டு, திண்ணைக் கப்புடன் பாடாய்ச் சாய்ந்து கொண்டாள் சின்னம்மாக் கிழவி.

கால்களிரண்டையும் நீட்டி முதுகுளைவு ஆற்றிய வண்ணம், பேரன் பொன்னுத்துரையை நினைத்து மனம் அபுந்தும் கிழவியின் கண்கள் கலங்கிக் கொண்டு வந்தன. சேலைத் தலைப்பைஎடுத்துத்துடைத்துக் கொண்டவள், 'இதில நிண்ட பொடியைக் காணன்' என்று நாலாபக்கமும் விழிகள் பேந்தப் பார்க்கிறுள்.

பொன்னுத்துரையைக் காணவில்லை.

'போனுல் போனதுதான். பொடி எப்பனுக்காவது வீடு வாசலோட இருந்தாத்தானே? எல்லாம் என்ர செல்லம்தான். சும்மா ஒருசண்ட சீருக்கு வெள்ளாடு மாதிரி ஓடித் திரியிறது தான் இந்தப் பொடிக்கு வேலை. நல்ல காலம் இந்தப் பொடியை நம்பி முத்தத்தில நெல்லைக் காயவிட்டிருந்தா கோழியள் வந்து முழு நெல்லையும் ஒடிச்சிருக்கும்?

கிழவி கோழியை நினைவு கூர்ந்து அஞ்ச, அதுவே ஒன்று அப்போது அடுக்களைக்குள் வந்துதலையை நீட்டியது.

"சூய், ஹாய்... இஞ்ச என்ன கிடககெண்டு ஓடிவாறியள்? அங்கினேக்க அயலட்டையில போய் அவன் பொன்னுத்துரையைப் போல மேயுங்கோ... போங்கோ..."

சடாரென்று அவன் நெஞ்சு துணுக்குற்றுச் சாம்பியது; யானை தன் கையால் மண்ணைப் போட்டநிலை.

'—நான் கூட என்ர புள்ளயக் கேவலமா மதிச்சிட்டனே. நான் கண் கெடுவாள். அவனைப்பெத்தவள் இருந்தால்— என்ர தாயத்தின்னியை அப்பிடி எழுந்தமானமாச் சொல்லிப்போட்டன். நான் கெட்டவள். இந்த அறுந்தவாய் சும்மா கிடக்கேல...'

பொருமி வந்த துக்கம் நெஞ்சைக் குடைகிறது. உமிழ்நீரை 'மூடுக்' கிட்டுத் தொண்டைக்குள்ளே இழுத்து மீட்டித் துப்பிக்கொண்டாள். மனப்பிராந்தி அவனை விட்டு அகலவேயில்லை; அது அவனைச் சுற்றியே நாய் வாலாக நிற்கிறது:

"...காலமெ பழஞ்சோறு திண்ட கையோட போன பொடி, பொழுதும் திரும்பி மத்தியானமாப்போச்சு இன்னும் வீட்டுக்கு வரமனமில்லாமா இருக்கே. வேற எங்க போயிருப்பான்? அங்கதான் போவான். அவே, குருகுருப்பில செல்லம் பொழிஞ்சு கொம்மாளம் அடிக்கிறதை இது வாய் விடாச்சாதிபோல, ஒண்டுந் தெரியாம 'ஆ' வெண்டு நிண்டு பார்த்துக்கொண்டிருக்கும். புத்தி புடிபாடு இல்லாட்டியும், 'அது எனக்கும் மச்சான் தான்; வயதும் கூடியது' எண்டு அவள் கொஞ்சமும் எண்ணிப்பார்க்காமல், இந்தத் தாய் தேப்பனைத் தின்னிக்கு முன்னல, என்னும்பொரு ஊரவனேட இருந்து குமுதம் குத்தி விளையாடுவாள். அவர் என்ன அம்மட்டுப் பெரிய ஆளே? கவுண்மேந்தில ஒரு ஒரு கிளாக்கனும். அது பெரிய வேலையே? நல்லாவிளையாடட்டன், எங்களுக்கென்ன? அதுக்காக இந்த வலது குறஞ்சதுக்கு முன்னலதான் அவே தங்கட குமரி - இளந்தாரி ஆட்டத்தைக் காட்டவேணுமோ? அது கிடக்க, இது ஏன அங்க நெடுக நெடுக ஓடுது? வரட்டுக்குச் செப்பமாச் செல்றன்...?"

முற்றத்தில் காய்ந்து தகதகக்கும் கானலலைகளைப் போல், கிழவியின் இருதயமும் கனல் கக்கி, எரிந்து அலையெழுப்பிப் புண்ணில் இறகுச் சிறுமபாய்க் குத்துகிறது.

கிழவிக்கு எல்லாம் தடுமாற்றம்.

★

"கூப்பிட்ட குரலுக்கு.'இந்தா வாறெனண பெத்தாச்சி' யெண்ட' பொடி, இன்னும் இஞ்சால வரக்காணல்லியே"

தன்பாட்டுக்கு புசத்திக் கொண்டிருந்த கிழவி, சினத்தோடு எழுந்து மறுபடியும் கூப்பிட வாயெடுக்க, பொன்னுத்துரையும் வந்து சேர்ந்து விட்டான்.

சடலத்தில் ஒட்டியிருந்த புழுதிப்படலங்களோடு, வியர்த்துக்கொட்டிய நீர்த்துளிகள், அழுக்குச் சரடாய் படைவிட்டு பாணியாக திரண்டு கோடிட்டு வழிந்துகொண்டிருந்தது. அவன் அதையெல்லாம் கவனியாது தன் வேட்டித் தலைப்பால் துடைத்தபடி சிரித்துக்கொண்டு வருவதைக் கண்ட கிழவிக்கு ஆத்திரமும் துக்கமும் நெஞ்சுள் கனக்க, அவை கடும் வார்த்தைகளாகப் பரிணமித்துக் கல் சொரிகின்றன.

"இதென்னடாஉன்ரகோலம்? ஒரு ஆன துணியைக் கட்டித் தலையைச் சீவிக் கீவி முழுகிக் குளிக்கிறேல்ல. ஆனவாகில வயிதையும் கவனியாம அங்க போய் என்ன விடுப்புப் பாக்கிறனி?"

'பேசிவிட்டு, ஓயாமல் என்ர புள்ளயப் பேசிறனே' என்கின்ற கவலை முகத்தில் குருக்குத்த, அவனைப் பரிவோடு பார்க்கிறுள்.

"விடுப்பில்லயணை பெத்தாச்சி, அந்த அண்ணை..."

"அதென்னடா அண்ணை, எந்தண்ணை?"

"அதானணை, எங்கட தங்கமலரக்காவோட வந்து பேச வாரானை, பாலசிங்கமண்ணை... அவர்..."

"எடேய் உனக்குத் தங்கமலர் ஆற்று? ஐயோ நீ முறைகூடத் தெரியாமக் கிடக்கிறியே. அந்தச் சிங்கிணிநோனு உன்ர மச்சான்தான்ரா. அதுபோக, அவள் உனக்கு எத்தனையோ வயதுக்கு இளையவள்லே, அவளைப் பார்த்து 'அக்கா' எண்டிறியே"

"என்னணை, அவ இம்மட்டுப் பெரிய பொம்புளையா இருக்கிறு. எங்கட அடுத்த வீட்டுச் சின்னத்தங்கச்சியக் காவை விட, இவ பெரிசா'ம்' மெண்டு தொக்கையா ஊதியிருக்கிறு. அப்ப, என்னெண்டு நான் 'தங்கச்சி'யெண்டு கூப்பிடுகிறது, சொல்லனணை?"

"ஐயோ! என்ர அப்பு! கண்கெடுவான் பாத்து உன்னை இப்புடிச் செய்துபோட்டானே!"

அவன் உதிரம் கரைந்து கண்ணீராய்ச் சுரக்கிறது. எந்த விதமாகச் சொல்லி அவனுக்கு விளங்க வைபடதென்று கிழவிக்குத் தெரியவில்லை.

'எப்புடி? நான் சொன்ன பிறகுதானே பெத்தாச்சி கடுவலா யோசிக்கிறு. இப்பதான் அவவுக்குப் புத்தி புடிபட்டிருச்கு. எண்டாலும் பெத்தாச்சி நெடுக ஒருசண்ட சீருக்கு அழுகுது, பாவம். அதோட நல்லா மெலிஞ்சு எலும்பாப் போனு. கனநாள் பாத்திருக்கிறன், அவ எனக்குச் சோத்தைப் போட்டுத் தந்திட்டு, தான் போய் வெத்திலய இடிச்சுத் திண்டிட்டுப் படுத்திடுவா. தங்கமலரக்காவே வயிறு வெடிக்க நல்லாத் தின்னுவினம். பெத்தாச்சி எப்பவும பட்டினிதான். அப்ப, என்னெண்டு பெத்தாச்சிக்குப் புத்திவரும்?"

பொன்னுத்துரை கிழவியைப் பரிதாபததோடு பார்க்கிறுன். கலங்கிய கண்களோடு கிழவியும் அவனைப் பார்க்கிறுள். அவளுக்கு இருமுனைத் தாக்கலான உபத்திரவம். ஒன்று, பொன்னுத்துரை. மற்றது இவன் சொன்ன 'அவன்' என்றவாள்.

"பெத்தாச்சி, நீ ஏனணை அழுருய்?"

"என்ர அப்பு. நான் ஏனடி அழுகிறன்? நீ என்னவோ, 'தங்கமலரோட வந்து பறையிற அண்ணை' யெண்டியே, அதாரது?"

பொன்னுத்துரையின் தலையைத் தடவிக்கோதிக் கோதிக் கொடுத்துக்கொண்டு, கிழவி அவனையேவைத்த கண் எடுக்காமல் இரங்கிப் பார்த்தபடி இருக்கிறுள்.

இப்படிக் கேட்டதும், இருளில் ஏற்றிய தீபஒளியாக இருந்த அவன் முகம், சூரியக் கதிர்களைப் புகார் விழுங்க இருள் சூலாகும் பூமி போல் கறுத்து வருகிறது.

"...அவர், நீ தோசை சுடுறத்துக்குக் குழைப்பாயணை அமெரிக்கன் மா, அதைப் போல என்னத்தையோ ஒரு களியை எடுத்துப் பாணில பூசிபபோட்டுத் திண்டார். திண்டிட்டு எனக்கும் தந்தார். அய்யோ, அது பொல்லாத அழுகல் மணம். நான் வேண்டாமெண்டிட்டன். புறகு அக்காவோட என்னவோ 'கசக்குப் புகச்' கெண்டு......என்னவோ எனக்குத் தெரியாதணை, பேரணை.........இஞ்சாணை சோத்தை..."

"என்ர அப்பனுக்குச் சோறு தரத்தானே கூப்பிட்டனுன். கதை சொல்றத்துக்கிடையில அவருக்கு கோவம் வந்திட்டுது, கோவம். அது என்னெண்டு எனக்குத் தெரிஞ்சாத்தானே?"

"என்னவோ இங்கிலீசில கதைச்சார். அதுக்கு அவ, 'உங்க உவரைவிட்டு வாங்குவியுங்கோ? எண்டு என்னை அவருக்குக் காட்டிச் சொன்ன. சொன்னேடன அவர் என்னைக் கூப்புட்டு, 'பொன்னுத துரை நல்ல புள்ளையாட்டம ஓடிப்போய் ஒரு நேவிக்காட்டுச் சிகரேற்றுப் பைக்கேற வேண்டிக்கொண்டு ஓடியா' எண்டு காசு தந்தார். நான்..."

"நீ வேண்டியந்து குடுத்தியாக்கும், என்ன?"

"ஓமணை"

"ஓமணையோ"

"அப்ப, குடுக்கப்படாதே?"

"சரி சரி, சொல்லு. இந்தக் கோதாரிக் கதையையெண்டாலும் எப்பனுச்குக் கேப்பம்"

"...ஓடிப்போய்வேண்டியந்து பாத்தன். விருந்தைக் கதிரையில இருந்து அக்காவும் அவரும் பறையினம்"

"ஆட்டக்காறக் குமரி?"

"ஆரணை ஆட்டக்காறக்குமரி. அக்காவோ, எண அவ அப்புடி ஒண்டும் ஆடேலயணை. சும்மா தான் இருந்தவ. மெய்யணை பெத்தாச்சி, அவ இன்னும் கலியாணம் செய்யேல. அதுக்கு முந்தி ஆம்புளையோட தனியப் பறையககூடாதல்லே, என்னணை?"

"அவள் தோறையை விடு. உன்ரசங்கதி என்ன, நீஅதைச் சொல்லு"

"...நான் அவுக்கடியெண அவவைத்தான் கூப்பிட்டன். அவ எழும்பேல. அவாதான் எழும்பி, 'சீ, ஏன் கழுதை மாதிரிச் சத்தம் போட்டனி? இஞ்சா சிகறேற்றை. தந்திட்டுப் போ" எண்டு கோவிச்சுப் பேசி, கையில் இருந்த சிகரேற்றுப் பெட்டியைப புடுங்கிக்கொண்டு, மறுக்காலும் கதைக்கத் துவங்கிவிட்டார்..."

"ஆ, ஆ. இதுக்குத்தான் அவ பெதுவிட்டுப் போனவவாக்கும்? டேய், நீ அவனுக்குப்- பல்லுடைய அடியாதையன்ரா"

"போணை. அவர் தான் கோவமாய்ப் பேசினவர். ஆனு, அக்கா அவரைத்தான் தாறுக்கும் மாறுக்கும் பேசிப்போட்டா"

"எப்ப பேசினவள்?"

"நான் கதவோட நிண்டு ஒட்டுவியளம் கேட்டன். 'அது பாவம், இந்த நெருப்பாய் எரியிற வெயிலுக்கால ஒரு கட்டை தூரம் ஒடிப்போய் சின்னப்புள்ள போல வேண்டிக்கொண்டுவந்து தருகுது. அதைப் போய்ப் பேசிறியளே. அது 'போ' எண்டால் போகுது. 'வா' எண்டால் வருகுது. மூளை இல்லையெண்டதுக்காக மாடாட்டம் நாங்கள் பாவிக்கலாமே? அது ஒரு நல்ல பிறவியெண்டபடியால்தான் தன் பாட்டில போகுது, கறுமக் கட்டை' எண்டு சொல்லிப் போட்டு கடைசியில, 'அது எப்பிடியெண்டாலும் என்ர ரத்தம்' எண்டு பேசு பேசெண்டு பேசினு. நான் அதோட ஓடியந்திட்டன். என்னெண்டாலும் அக்கா நல்லவ,என்னணைபெத்தாச்சி?"

"ஓ...ஓ...நல்லவள்தான்.எங்கட வங்கிஷத்திலயும் இல்லாத கிலிசகேட்டை நடத்திருள். நீ இனிமேல்பட்டு அங்க போகாதே"

"ஏனணை?"

"அது உனக்குத் தேவையில்லை. போகப்படாதெண்டால் போகப்படாது. மதியாதார் வீட்டு முத்தம் மிதியாதை. அம்மட்டும் தான்"

"அவ, நல்லவதானே?"

"அவ நல்லவ, அவனுக்கூடா. உனக்கில்லை. பேசாம வீட்டோட இரு."

"சரியணை. என்ணை பெத்தாச்சி, சடங்கு செய்யிறதுககு முந்தி பொம்புளையோட ஆம்புளை கதைக்கிறேல்ல. அப்ப, இவே கதைக்கினமே, இது புழைதானே?"

"அது புழைதான். அவள் எக்கேடுகெட்டும போகட்டும். எங்களுக்கென்ன? ஆனு, நீ இனி அங்கால போகாதை. போனு நான் அவள் உன்ர தோச்சியைப் போல செத்துப்போவன்"

"என்னணை கதைக்கிருய்? நீ செத்தா எனக்கு ஆர் சோறு

(8-ம் பக்கம் பார்க்க)

உள்ளுணர்வு

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தருவினம்? அப்ப, நானும் சாவன். சரி, நான் இனிமேல் போகேல்லேயணை!"

"எங்க, பெத்தாச்சியாண எண்டு, என்ர தலேயில அடிச்சுச் சத்தியம் பண்ணி வாக்குக் குடு."

"அ, இந்தா: என்ர பெத்தாச்சியாண நான் அங்கால போகேல்ல"

"எடி, என்ர ராசகிளி, இம்மட்டு நல்ல புள்ளயா இருக்கிற உனக்கு, இந்த ஒரவாங்கியம் பிடிச்ச கடவுள், என்ர அப்பனுக்குக் கொஞ்சமெண்டாலும் அறிவைத்தராமல் போட்டானேயடி! ஐயோ, என்ர அப்பு!"

பொன்னுத்துரையை வாரியணைத்துக் கட்டிப் பிடித்துக் கொண்டு அவள் விம்முகிறாள். கிழவியைப் பார்த்தவுடன் அவன் முகமும் வெதும்பல் மாங்காயாகிறது. 'ஏன் அழுகிறேம்?' என்று இருவருக்கும் பூரணமாகத் தெரியாத சோகங்கிலே.

★

இத்தனை காலமாக எந்தச் சலனக் குழியிலும் சிக்காமல் சுதந்திர வியாபியாயிருந்த பொன்னுத்துரை, கிழவிக்குச் சத்தியம் செய்து வாக்குக் கொடுத்தபின், ஏதோ தன்மனதில் பெரும்சுமையொன்றுவந்து ஏறியிருப்பதாகவும், அதனால் தன்மனம் போனபடி, ஏகாந்தமாய் திரிய முடியாமலிருப்பதாகவும் உணர்ந்து அதனால் கிழவி மீது வெந்து வெடித்து எரிந்து கொண்டான்.

'கல்யாணம் புரிவதற்குமுன் ஆணும் பெண்ணும் ஒன்றுக்க் கூடிக் கதைபபது மரல்ல' என்று, தான் தெரிந்துகொண்டதைக் கிழவியும் சேர்ந்து ஆமோதித்துக் கொண்டதால் அவனுக்கு ஒரு நிறைவு. ஆனால், இதைப்போய் தங்கமலருக்கு அல்லது பாலசிங்கத்துக்கு எடுத்துச் சொல்ல முடியுமா? கிழவி வலிச்சல் கட்டையென்றாலும் எப்படியோ பொன்னுத்துரையின் கால்களுக்கு விலங்கு போட்டுவிட்டான். ஆள் காரியகாரிதான்.

ஒருநாள் தங்கமலரும் பாலசிங்கமும் தெருப்படலையோடு நின்று கெக்கலித்துச் சிரித்துப் பேசிக்கொண்டிருப்பதைப் பொன்னுத்துரை பார்த்துவிட்டான். பார்த்ததும் ரோஷம் குபீரென்று பாய்ந்து கோபம் மேலிடுகிறது அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல், 'வேறு ஏதோ சோலியாகப் போகிறானுக்கும்' என்று தன்னை அவர்கள் எண்ணிக்கொள்ளவேண்டுமென்பதற்காக, புறங்கைக்கட்டுடன், மெதுவாகத் தன்பாட்டுக்கு அதே தெருவால்போய்க் கொண்டிருந்தான்.

தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு கிட்ட நெருங்கி, இருமிக் கனைத்துப் பாவனைசெய்து வெறும் உமிழ்நீரை, 'ம்ங்கூ, க்கா ... துப்' என்று படலையைப் பார்த்து முகத்தைக் கோணி வைத்தபடி, நாக்கைப் புரட்டி வறட்டி எடுத்த துப்பலைத் துப்பிவிட்டு, கடைக்கண்களால் வெறிகொள்ளப் பார்த்தான்.

"மலர், எங்கட அறிஞர் பொன்னர் வாறார்."

பொன்னுத்துரையைச் சுட்டிக்காட்டி, தங்கமலரைப் பார்த்துக் கொண்டே குனிந்து நிமிர்ந்து சிரித்தான் பாலசிங்கம். தங்கமலரும் சிரித்துவிட்டுப் பொன்னுத்துரையையே நூதனமாகப் பார்த்தாள். இரக்கமும் பரிகாசமும் கலந்த சிரிப்பு.

அவ்வேளையாகப் பார்த்து ஒரு 'யூனிவர்ஸிட்டி'க் காற்சட்டைக் கூட்டம் ஒன்று பிரசன்னமாகி "ஹலோ மச்சான் பாலு, 'வென் இஸ் யுவ மரீஜ்'?" என்று 'பிக்னிக்' போகும் கதிகரக்க, ஒரு 'ஹனிமூன்' தோரணையில் ஆர்ப்பாட்டக்குரல் போட்டுத் தங்கமலரையே பார்த்துநின்றது. தங்கமலர் அப்போ தன் முகத்தை நாணிப் பூவாகமலர வைத்துப் பாலசிங்கத்தை விழுங்கிக் கொண்டிருந்தாள். பாலசிங்கத்துக்கு விஷயம் இன்னதென்று விளங்கிவிட்டது.

வந்த கூட்டத்தைத் தங்கமலருக்கு அறிமுகப்படுத்தி வைத்தபின் பாலசிங்கம் 'பொக்கட்'டுக்குள்ளே கையைவைத்தான். அது 'எம்ரி'; 'சிகரட்' ஒன்று கூட இல்லை. முன்னே போய்க் கொண்டிருக்கும் பொன்னுத்துரைமீது, 'நீ தான்ரா தஞ்சம்' என்று மனம் கெஞ்சி, அவன் மீது பாலசிங்கத்தின் கண்கள் பருந்து இரஞ்சின்றன.

"பொன்னுத்துரை, ஒருக்கா உந்தக் கடைக்குப்போய ... ஓ, மன்னிக்கவேணும். நான் இவரை உங்களுக்கு அறிமுகப்படுத்த மறந்து போனேன். இவர், நம்ம மலரின்ர ஆசை மச்சான். என்ன சிரிக்கிறியள்? சத்தியமா உண்மை. ஆளும் ஏக்கிபோக்கியான ஆளில்லை; ஒரு அறிஞர். எடயப்பா, நீங்க எல்லாரும் ஒருமிக்கச் சிரிக்க அர்தாளுக்குக கோவம் வரப் போகுது. உண்ணன நான் பதடி இல்லாமல் சொல்றன்: நல்ல வெள்ளமனசு; சொன்ன தெல்லாம் செய்யும் ..."

பாவனையில்தடம்புரளுகிறனர்.

"கொண்டா காசை."

பொன்னுத்துரை பாலசிங்கத்திடம் தானேவே வாய்விட்டுக் காசைக் கேட்கிறான். தன்னுடைய சொல்லுக்கு மதிப்பவித்துவிட்ட பொன்னுத்துரை மீது தங்கமலருக்கு உண்மையிலேயே இரக்கம் பீறிடுகிறது.

சைனீட்டிக் காசை வாங்கிய பொன்னுத்துரை ஒரு அடிகூட எடுத்து அப்பால் நகரவில்லை. அதைக் கைக்குள் வைத்து மடக்கி உருட்டி, மறுபடி எடுத்து விரித்துப் பார்த்துக் கொள்கிறான். மனசில் ஒரு குறும்புப்புத்தி எழுந்து வறுத்து அழுகு சாம்புகிறது.

'இந்த ஒரு ரூவாத்தானே, தூள்தூளாகக் கிழிச்சு இவன்ர முகத்தில், அல்லாட்டி அவளின்ர மூஞ்சையில சுழட்டி வீசட்டோ? என்னத்துக்கு, வேண்டாம். பெத்தாச்சி அறிஞ்சா எக்கணம் என்னைத்தான் பேசுவா'

அவன் உடல் படபடக்கிறது.

'இந்தா உன்ர காசு. உனக்குச் சிகரட் வாங்க, இனி நான் போகமாட்டன்."

'எடே!'

பாலசிங்கத்துக்கு அதிர்ச்சி. அது அவன் நெஞ்சில் ஏற்றிய ஒரு குண்டுசி.

'எடி ஆத்தே!'

தங்கமலரின் கண்கள் வியப்பில் குமிழ்ந்து பிள்ளைக்கற்ற ஊர்ச் சதையாகப் பிதுங்குகின்றன.

"என்ன மிஸ்டர் பாலு. உங்கட அறிஞர் உம்மட காதைச் செவ்வையாகக்கடிச்சிட்டாரே"

நண்பர்கள் பாலசிங்கத்தின் காதைத் திருகிவிடுகிறார்கள். குய்க்காட்டும் அவர்களின் ஆச்சியையும் அக்காவின்ர ... இல்ல எனக்கு வயது கூட ... தங்கமலரின்ர அப்புவையும் எங்கட பெத்தாச்சிதான்ரா பெத்தவ. அப்ப, ஆர் முறத்தி?"

"பிறதர், இந்தாளோட வாய்க்கு வாய் குடுத்துப் பேசிறது உனக்கு 'றெஸ்ப்பெக்டா?' கம், கம் ... "

நண்பர்கள் நயமாக எடுத்துச் சொல்லியும் பாலசிங்கத்தின் மண்டைக்குள் புயல்தான் அடிக்கிறது.

"டேய், வாய்க்கு வாய் குடுத்து முகரைக் கட்டை உடைய வாங்காமல்எங்கையன் ஓடுரு கழுதை."

"உப்பிடிச் சொன்னியெண்டா, நான் உன்னையும் கழுதை எண்டுதான் சொல்லுவன்."

"சொல்ரு பாப்பம்?"

"நீர் சொல்லும் பாப்பம்?"

"கழுதை, முதேவி, தூ ... "

"நீயும் முதை, முதேவி, நாய், தூ ... தூ ..."

மின்னல் போல் 'சடா' ரென்று பொன்னுத்துரையின் தலையில் ஒரு பலமான அடி விழுகிறது.

"ஐயோ! என்ர பெத்தாச்சி! இவன் பாலசிங்கம் எனக்கு அடிச்சுப் போட்டானணேய் ... ணேய் பெத்தாச்சியோய்...!"

அடித்தகரம் ஓய, 'சா, ஏன் அடிச்சன்' என்று தன் கையைப் பாலசிங்கம் தூக்கிப் பார்க்கிறான். அந்தக் கையில் ஒரு பனம் சிலாகை இருக்கிறது. அது இன்னும் அவன் கையை விட்டு நெகிழவில்லை.

தன் கைக்கு அது எப்படி வந்ததென்று அவனுக்கும், அந்த மின்சாரவேகத்தில் அந்த அடி விழுந்தது என்று மலருக்கும் புரியவில்லை.

இந்தச் சூருவளியில் தவித்து நிற்கும்போது, "ஐயோ, என்ர தாயத்தில்லிக்கு எந்தக் குறுக்கால போவான்ரா அடிச்சவன்? டோய், காற்று அந்தப் புளுக்கப்பயல?" என்று நிலம் அதிரக் குடுகுடென்று விழுந்தடித்துக் கொண்டு கிழவிதெருவுக்கு ஓடிவருகிறான். கிழவியைக் கண்டதும் பொன்னுத்துரை, "என்ர பெத்தாச்சி, இவன் பாலசிங்கம் எனக்குப் பொல்லால மண்டையில அடிச்சுப் போட்டானணே" என்று சொல்லி ஒப்பாரியாய்ப் புலம்பி, அடிவிழுந்து வீங்கிய உச்சந்தலையையும் ஒருகையால் அழுத்திப் பிடித்தவண்ணம், கேவிக் கேவிக் குரலெடுத்து அழத்தொடங்கிவிட்டான்.

கிழவியைப் பார்த்து அவன் அழ, அவனைப் பார்த்துக் கிழவி பிரலாபித்துக் கொள்ள இப்படி எல்லோரும் அங்கலாய்த்து நிற்கும்போது அங்கே தெரிவது ஒரு சந்தடி நிறைந்த கறிக்கடை.

தங்கமலர் விழியை உருட்டி, கிழவியையும் பொன்னுத்துரையையும் பார்க்கிறாள். செத்த கண்கள்.

"எடிய குமரி. எல்லாம் உன்னாலதானடி வந்தது. அது பாவம், சின்ன வயதில தேப்பனையும் தாயையும் திண்டிட்டுத் தேடுவாரத்து நாயா அலையுது...என்ர ராசா நீ அழாதையடி...டியே, உன்ர கொப்பனும் இதின்ர தாயும் ஒரே வயித்தில பிறந்து வந்தவை. செத்தவன்—உன்ர மாமியோட போட்ட சாணக்கூறையையும் உன்ர கொப்பன் கைகழுவி வாக்குத் தவறிப் போட்டான் காரியமில்லை; அதுதான் போகட்டுக்கு. இது வலது குறைஞ்ச தெண்ட இளக்காரத்தில கை வட்டியள். சரி, அதுவும் வேண்டாம். நீ இதைஉன்ரரத்த மெண்டு எப்படியது மதிச்சியடி?புதுப்பணமவந்து புடிப்பட்டதிமிரில,நீ என்னும் பொரு ஊரவனோட... எங்கயோ கிடந்த காவாலிக்கு மவுசுதடுக்கிறாய். உன்ர ரத்தத்தை நாயாக்கூட மதிக்கேல. உங்களைக் கடவுள்தான்ரி எக்கணம் நீதி கேப்பார்..."

கிழவிக்கு இன்னும் ஆவேசம் அடங்கவில்லை. மேல்மூச்சு கீழ் மூச்சு வாங்குவதால் தன் ஆத்திரம் தீரப்பேசவும் முடியவில்லை.

தங்கமலர் ஒன்றும் பேசாமல் ஊமையாயிருக்கிறாள்; அவள் நெஞ்சில் சூல்கொண்டிருப்பது ஒரு மௌனசபை. ஆனால், பாலசிங்கத்தால் அப்படியிருக்க முடியவில்லை.

"ணேய்கிழவி,என்ன நாயாட்டம் குலைக்கிறாய்?"

"டேய் புளுக்கப் பயலே; கீழ் சாதி வடுவா. உனக்கு அடிப்பன்ரா பழம் விளக்குமாத்தால. ஆரைப்பாத்தடா நாயெண்டாய்? ஒரு சொட்டுப் பச்சைத் தண்ணிக்கும், இத்தவரை காலமும் ஆரிட்டயும் பின் சென்டறியன். நீதான்ரா விசர் நாயாட்டம் கண்ட நிண்ட கவுண்காறியளோட ஓடி ஓடித் திரிஞ்ச குசுகுசுக்கிறனி; காவாலி; வப்பி..."

"சிக், கிழட்டுச் சனியன், இதில நிண்டு சத்தம் போடாம போடி வெளியால!"

"மிஸ்டர் பாலசிங்கம்! வாயை மூடும். கொஞ்சமெண்டாலும் மனுத்தன்மை வேணும். அது இப்ப எங்க இருக்கெண்டு தெரிஞ்சுபோச்சு. பாயிற அணில ஒரு கொப்பில இருக்காது. 'பிளீஸ் கெட் அவுட்'!"

கழுத்தறுக்கும் கத்தியாக இந்தக்குரல் வருகிறது; மடை உடைத்த வெள்ளம் கடலுக்குள் சங்கமிக்கும் வேகம். பாலசிங்கத்தின் கர்ச்சனையைச் சிதைத்துக் கிழித்துக்கொண்டு, தங்கமலர் கத்திய வெஞ்சொற்கள், அவனுக்கு ஒரு மரணக் குரலாகக் கேட்டு, அவன் நெஞ்சுப் பொட்டகத்தைக் கொலுப பிரிக்கின்றன. அவன் இதயம் ஒரு வெடித்த பலூன்.

பாலசிங்கம் நடக்கிறான்.

தங்கமலர் பொன்னுத்துரையை இமைக்குள் வாங்கிக் கனிவோடு பார்க்கிறாள். அவளின் கண்மடல்களில் நெய்யுருகிக் கண்ணீர் வழிந்து கொண்டிருக்கிறது.

"பெத்தாச்சி, நீ அழாதையணை. எல்லாத்துக்கும் இனி நான் இருக்கிறன்!"

தங்கமலரின் கனிவான அழைப்பு, கிழவியின் நெஞ்சுக்குள் வெண் மலர்கள் தூவுகின்றது.

'இனி நான் நிம்மதியாகச் சாவன்.'

கிழவி மேலே பார்க்கிறாள்.

'தங்கமலர் நல்லவனெண்டு நான் எப்பவோ சொன்னனான். பெத்தாச்சிதான் மறுத்து நிண்டா. இப்ப ஆர் சொன்ன வாக்குச் சரி வந்தது?'

தன்னுள் பெருமையுற்று, நாணிப் புளகித்த பொன்னுத்துரையின் முகத்தில் இப்போது தெரிவது ஒரு செவ்வரத்தம் பூ.

(யாவும் கற்பனை)

ஞாயிறு கதை மலர்

அறிமுகக்கதையோடு பாலசிங்கம் ஒரு ரூபாய் 'நோட்'டை எடுத்துப் பொன்னுத்துரையிடம் நீட்டி, "இதா, ஓடிப்போய் ஒரு 'பைக்கட் சிகரட்' வேண்டியா" என்று கொடுத்தான்.

உலைச்சோறுக்கொதிக்கும் குடுவைக்குள் பொன்னுத்துரையின் இதயம் விழுகிறது. கண்கள் பிழிந்த தக்காளிப் பழமாக உமிந்து நைகின்றன. உடலின் இரத்த நரம்புகள் அறுத்துப்போட்ட ஆட்டின் துள்ளல்.

ஒன்றும் பேசாமல் தங்கமலரையே அவன் பார்க்கிறான். அவனின் பார்வைக்குள் அவள் பஞ்சாகத் துருதுருக்கிறாள்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை; புரியும் நிலையிலுமில்லை.

"என்னது என்னை உப்பிடிப் பூந்து பாக்கிறாய்? போவன், போய்வேண்டிக்கொண்டுவந்து குடன்."

தங்கமலரின் கிளிச்சொண்டுகள் உறிஞ்சிக் கூழ்குடிக்கும் வார்த்தையை விழுங்கிய பாலசிங்கம். கோபத்தீக்குள் தஞ்சமாகின்றான். புலிப் பாய்ச்சலில் எழுந்த அந்தகாரம் பூனைச்சீறலில் வந்துதரிக்கிறது.

'ப்ளடி ரூல்கல்.

பாலசிங்கத்தின் பொறுமைக்குச் சோதனை, அவன் ஒரு கை நெகிழ்ந்த கோழிமுட்டை.

"ப்ளடி ரூல்கல். என்ரா சொன்னனி?"

நெருப்பு பிடித்த சீறுவாண வேகத்தில் ஒருமின்னல் அவன் வாயில் தெறிக்கிறது.

"பெரிய இங்கிலீசு படிச்சிப் போட்டார். தமுழில பேசாம, 'புளடி கிளடி' யென்டு இங்கிலீசில பேசினாப்போல நான் பயந்து போய்வேண்டித்தந்திடுவனுக்கும். நான் பெத்தாச்சிக்குத் தான் பயம். நான் அவ சொல்றதைத்தான் செய்வன்"

"இதில் நிண்டு கதையாதை, போடா கழுதை."

"அ, நீதான்ரா கலியாணம் முடிக்க முந்தி, பொம்புளைய ளோட வெக்கமில்லாமல் கதைக்கிறனி. அண்டைக்கு ஒருநாள் பாத்தன், வேற ஒரு பொம்புளையோட கதைச்சனி. நீதான் போடா"

நண்பர்கள், 'சோஷல் மூமன்ட்' என்னவென்று இந்தப் பிறவிக்கு எப்படியப்பா தெரியும்? என்று தங்களுக்குள் ரகசியித்துக் 'கொல்'லென்று சிரிக்கின்றார்கள். எரியும் பாலசிங்கத்தின் இருதயத்தில் அது எண்ணெய் வார்க்கிறது. பாலசிங்கம் பாலசிங்கமாக இல்லை.

"கண்ட நிண்ட நாயளுக்கெல்லாம், படிச்சவயளோட சரிசமக் கட்டிக கதைக்க இடம் கொடுத்தா இப்படித்தான் கடைசியில் 'றிசல்ட்' வரும். ஒரு கழுதை"

"ஆற்ரு கண்ட நிண்ட நாய்? நீ தான்ரா புறத்தியான். என்ர

அழகிய பெளியன
கால்மேல் !!
"லேடன்"
தயாரிப்பு
யாழ்ப்பாணத்தில்
உற்பத்தியாகின்றன
LEYDEN
பல தினுசுகள்! பல அளவுகள்!! எங்கும்கிடைக்கும்
இன்றைய தேவை: சுதேசிப்பொருள் ஆதரவு
அதற்கு வழி 'லேடன்' பெனியன்கள்
கால்மேஸ்களை அணிவதே.
உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு
பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது
'லேடன்' பெனியன்களும், கால்மேஸ்களும்
கொழிற்சாலை
7, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

'ஒரே உலகம்' ஒரு கனவல்ல

விரைவிலோ தாமதித்தோ ஒரே உலகம் என்ற கருத்து நடைமுறைக்கு வரக்கூடும். உலகில் தகராறுகளைப்போக்க இந்தக் கருத்து அவசியம். அபாரமான விஞ்ஞான முன்னேற்றமானது இந்தக் கருத்தின் வளர்ச்சியைத் தூண்டிப் படுத்திக் கொண்டிருக்கிறது.

மொழி, இன வேறுபாடுகள் இருந்தபோதிலும் உலகம் சுருங்கிக்கொண்டு வருவதை அநேகர் உணரவில்லை. உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் ஒரு பொது மேடையில் சந்திக்கும் நாள் கனவாகி விட்டது. நாடுகளுக்கிடையில் இப்போதுள்ள பயமும் அவநம்பிக்கையும் அப்போது இராது.

—நேரு

கலை-அரங்கம்

புதுமுகம் மாதவியின் புதிய அனுபவம்

ஸ்கூட்டரிலிருந்து விழுந்து காயமுற்றார்

"பணக்காரக்குடும்பம்" படத்தில் ஒரு காட்சியில் தோன்றுவதற்காக ஸ்கூட்டர் செலுத்தக் கற்றுக்கொண்டபோது புதுமுகம் மாதவி விபத்துக்குள்ளாகி சிறுகாயங்களுடன் தப்பினார். விபத்து எந்த வீதியிலும் நிகழவில்லை. ஸ்கூட்டரை நிறுத்தத் தெரியாததினால் பழகிக்கொண்டிருந்தபோது ஒரு பள்ளத்தில் தடம்புரண்டு விழுந்து காயமடைந்தார்.

'வாழ்க்கை வாழ்வதற்கே'

கமல் பிக்சர்ஸின் "வாழ்க்கை வாழ்வதற்கே" என்ற புதிய தயாரிப்பு ஒரு குடும்பச் சித்திரம். படத்தின் கதாநாயகனாக ஜெமினி கணேசன் வருகிறார். அவனை மயக்க எண்ணி ஏங்கும் முறைப்பெண் வள்ளியாக பி. சரோஜாதேவி தோன்றுகிறார். தங்கவேலு இப்படத்தில் இரட்டை வேடத்தில் தோன்றி கைச்சுவைக் கட்டங்களில் நீந்தி படம்பார்ப்பவர்களைச் சிரிப்பில் திணறவைக்கிறார். விஸ்வநாதன் இராமமூர்த்தியின் இசை அமைப்பும் மாறனின் வசனங்களும் கண்ணதாசனின் பாடல்களும் சோபிக்கும் இப்படத்தை கைதேர்ந்த கிருஷ்ணன்—பஞ்சு டைரக்ட் செய்துள்ளனர். எஸ். ஏ. அசோகன் வெள்ளைக்காரத்துரைவேடத்தில் தோன்றுகிறார். புதுமுகம் சாரதா இரண்டாவது கதாநாயகி மற்றும் எஸ். ராமராவ், சாக்ரடீஸ் தங்கராஜ், ஜி. சகுந்தலா, பேபி பத்மினி முதலானோர் நடித்துள்ள இப்படம் ரசிகர்களை மகிழ்விக்க சமீபத்தில் வெளிவந்திருக்கிறது.

யப்பானியப் பெண்கள் எழுச்சி

யப்பானிய அரசாங்கம் அதன் ஆகரவிலுள்ள புகையிலைக் கம்பெனிகளின் சார்பில் தயாரிக்கப்படும் சிகரட்டுகளின் விளம்பரத்துக்காக வருடத்துக்கு 16 லட்சம் ரூபாவுக்குமேல் செலவிடுகிறது. 'இது அநியாயமானது இவ்வளவு தொகையான பணத்தை நூறுவீதம் புற்றுநோய் பற்றிய ஆராய்ச்சிக்கு செலவிடலாம்' என்று கூறி யப்பானிய பெண்கள் சமீபத்தில் நாடெங்கும் எதிர்ப்புக்கிளர்ச்சி செய்துவருகின்றனர்.

முழுக்கவும் இசை முழங்கும் பிரெஞ்சுப் படம்

பாடல்களைக் கொண்டே கதைப்போக்கைக் கொண்டு செலுத்தும் முதல் பிரெஞ்சுப் படத்தை படஉலகைச் சேர்ந்த பெண் தயாரிப்பாளர்களின் சிறு கூட்டமொன்று தயாரித்திருக்கிறது. "செர்போக் குடைகள்" என்று இப்படத்துக்குப் பெயர். இசை, பாடல் ஆகியன மூலமாக மிகச்சிறந்த முறையில் இப்படம் சித்தரிக்கப்பட்டுள்ளதால் இதில் முற்றிலும் இசைத் தன்மையே அமைகிறது. முதன்முதல் இசை முழுவதும் எழுதப் பெற்றுப் பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட இந்த இசைப் பாடல்களை வைத்துக் கொண்டு, இதில் நடித்த நடிகர்கள் தாம்படத்தில் வெளியிட வேண்டியவற்றைக் கற்றனர். இசையாகவே இருக்கும் ஒரு படத்தை எடுக்கவேண்டுமென்று நெடுங்காலமாக இருந்து வரும் ஆவலே, இப்படத்தை டைரக்ட் செய்த ஜேக்கூஸ் டெமி தீர்த்து வைத்துவிட்டதாகக் கருதப்படுகிறது. காதல் வசப்பட்ட ஓர் இளைஞனையும் கன்னியையும் பற்றிய இப்படத்தின் கதை மனத்தைத் தொடும்படியாக வுள்ளது.

சிவாஜி ரயில்வன்ஜின் டிரைவர் ஆகிறார்

வேல் பிக்சர்ஸார் தற்போது தயாரித்துவரும் சமூகப் படத்தில் நடிகர்திலகம்சிவாஜிகணேசன் ரயில்வே என்ஜின் டிரைவராகவும், அவரதுஉதவியாளராக நாகேஷும்நடிக்கின்றனர். இவர்கள் இருவரும் நடித்த சில காட்சிகள் சமீபத்தில் படமாக்கப்பட்டன. எஸ். எஸ். ராஜேந்திரன், எம். ஆர். ராதா, ராஜன், எஸ். வி. ரங்காராவ், ஆர். விஜயகுமாரி, சௌகார் ஜானகி, புதுமுகம் ராதா என ஒரு நட்சத்திரக்கூட்டமே இப்படத்தில் நடிக்கிறது.

ஒரு படத்துக்கு 2000 பிரதிகள்

"இரும்புத்திரை நாடுகள்" என்றழைக்கப்படும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட சினிமாப்படங்கள் அதிகம் காட்டப்படுகின்றன. அதற்கு அடுத்தபடியாக மேற்கு ஜெர்மனி தயாரிக்கும் படங்கள் காட்டப்படுகின்றன. 'பாவம்' என்ற மேற்கு ஜெர்மன் படம் 15 சோவியத் மொழிகளில் 'டப்' செய்யப்பட்டுள்ளது. மேலும் 36 சோவியத் மொழிகளில் அதற்கு விளக்கவாசகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பல பரிசுகள் பெற்றுள்ள இப்படத்தில் சுமார் 2000 பிரதிகள் ரஷ்யாவில் பல இடங்களில் காட்டப்படுகின்றன.

சர்வதேச திரைப்பட விழா

இந்த வருஷம் நவம்பர் மாதத்தில் இந்தியாவில் சர்வதேச திரைப்படவிழா ஒன்று நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இது செய்தியை அறிவித்த தகவல் ஒலிபரப்பு அமைச்சர் இவ்விழாவில் சோவியத் ரஷ்யாவும் கலந்து கொள்ளுமெனத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீதியாகராஜர் மகோற்சவம்

அகில இலங்கை இசையாசிரியர் சங்கம் ஸ்ரீ தியாகராஜர் இசைமகோற்சவத்தை யாழ்ப்பாணத்தில் இம்முறை எதிர்வரும் மார்ச் மாதம் 27, 28, 29-ம் திகதிகளான வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களிலும் கொண்டாடுகிறது. இசை ஆசிரியர்கள் பலரும் இவ்விழாவில் கலந்து கொள்வார்கள்.

விழாவில் சங்கத்தலைவர் திரு. வேலாயுதம் பிள்ளைக்கு "சங்கீதகலாநிதி" என்ற பட்டமும் வித்துவான்கள் திரு. ஏ. நடராஜா, திரு. ஈ. சுப்பையா (நடன ஆசிரியர்), திரு. எஸ். வைத்தீஸ்வர ஐயர் ஆகியோருக்கு "சங்கீத கலாரத்தினம்" என்ற பட்டமும், திரு. எஸ். எஸ். இரத்தினம்பிள்ளை, திரு. வி. சித்திவிநாயகம், திரு. எம். வர்ணகுலசிங்கம் ஆகியோருக்கு "சங்கீதகலாமணி" என்ற பட்டமும் வழங்கப் பெறும்.

வைத்திய மாணவர் சினிமா நடிகரானார்

ஸ்ரீதரின் "காதலிக்க நேரமில்லை" படத்தில் நடிக்கும் புதுமுகம் ரவிச்சந்தர் சென்னை வைத்தியக் கல்லூரியில் டாக்டருக்குப் படிப்பதற்காக கோலாலம்பூரிலிருந்து சென்ற ஆண்டு வந்தவராம். படிப்புக்கு முழுக்குப்போட்டு வைத்துவிட்டு சென்ற ஆண்டு 'சித்ராலயா' வுடன் ஐந்து வருஷ ஒப்பந்தம் செய்துகொண்டார். இவரது இம்முடிவு கோலாலம்பூரிலிருக்கும் அவர் தந்தைக்கு முதலில் ஏமாற்றமளித்தபோதிலும் பிற்பாடு சமாதானப்பட்டுக்கொண்டாராம்.

12 தினங்கள் ஒரே சிவராத்திரி

தொடர்ந்தாற்போல 276 மணி நேரம் உறங்காமல் விழித்திருந்து ஒருவர் புதிய உலகசாதனையை ஏற்படுத்தியுள்ளார் என்று மதீலுச் செய்தி ஒன்று கூறுகிறது. இருபத்தைந்து வயதான கலிபோர்னியா ரெக்கியாவி என்னும் இந்நபர் வீட்டுக்கு வர்ணம் பூசும் தொழில் செய்பவராம்.

இதற்குமுன் குலியோ படோனி என்பவர் 272 மணி நேரம் தூங்காமல் விழித்திருந்து சாதனை ஏற்படுத்தியிருந்தார்.

நாடக மேடையில் சாவித்திரி

நடிகையர் திலகம் சாவித்திரி சென்னை அண்ணாமலை மன்றத்தில் இம்மாதம் பிற்பகுதியில் கஸ்தூரிபா நிலையத்தாரின் 16 வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெறும் ஒரு நாடகத்தில் முதல் முறை மேடையேறி நடிக்கப் போகிறார்.

கோயிலும் சுனையுங் கடலும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

விபூதியை அம்மன்னனுக்குக் கொடுத்தார். அவன் வாங்கி நெற்றியில் தரித்தவுடன் அவனுக்குக் கண்கள் தழைத்தன; பார்வைமீண்டது. இந்த இடம் கண்தழாய் அல்லது கந்தளாய் எனப்படுகிறது என்று ஒரு கர்ணபரம்பரை உண்டு.

14-ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள் திருக்கோணேசுவரம், திருக்கேதீச்சுவரம், இராமேசுவரம் என்னும் தலங்களை ஓர் யந்திரவிமானத்தில் சென்று தரிசித்துவந்தனர். என்று ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை அவர்கள் தமது யாழ்ப்பாணச் சரித்திரத்தில் குறிப்பிடுகின்றார்.

பெரிய புராணத்தில் சேக்கிழார் (12-ம் நூற்றாண்டு) "ஆழிபுடை சூழ்ந் தொழிக்கும் ஈழந்தன்னில் மன்னு திருக்கோணமலை" என்று கூறுகிறார். 15-ம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் இதனைத் திருக்கோணமலை என்று சுறிப்பிட்டிருக்கிறார். 13-ம் நூற்றாண்டில் வெளிவந்த மச்ச புராணத்தில் இது மச்சேந்திரபர்வதம்எனக் கூறப்பட்டிருக்கிறது.

சிறிது காலத்திற்கு முன் திருக்கோணமலையில் கோணேசர் கோவிலுக்கு அணித்தாக உள்ள ஆழ்ந்த கடலில் சுளியோடிய மைக்கேல் வில்ஸன் என்னும் மேல்நாட்டவர், சிவலிங்கம் ஒன்றினை ஆழியில் கண்டுபிடித்தெடுத்தார். அவர் கண்டுபிடித்த லிங்கம் பஞ்சமுக லிங்கம் என அறிஞர் கருதுவர். பௌத்தமதம் இலங்கைக்கு வருமுன் பஞ்சமுகலிங்க வழிபாடு இங்கு பரவியிருந்தது என்பது ஆராய்ச்சியாளர் கூற்றாகும். சில ஆண்டுகளுக்குமுன் கண்டெடுக்கப்பட்ட சந்திரசேகரர் விக்கிரகம் சோழரின் பொற்காலமாகிய 12-ம் நூற்றாண்டினைச் சேர்ந்ததாகலாம்.

சென்ற ஆண்டு 3-4-1963 கோணேசர் ஆலயத்துக்குக் கும்பாபிஷேகம் நடைபெற்ற காலந்தொட்டு, சைவத்தொண்டர்கள் அவ்வாலயத்து சூழலைச் சுத்தஞ்செய்துவருகையில் ஒரு பழைய லிங்கத்தைக்கண்டு பிடித்தனர். அந்தலிங்கம் ஒரு வித வெள்ளைப் பளிங்கு போன்ற கல்லால் அமைக்கப்பட்டது. ஆவுடையார் கறுப்புக் கல்லினால் ஆனது. லிங்கமும் ஆவுடையாரும் எட்டுப்பட்டைகளால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இது பல்லவர்களால் அமைக்கப்பட்டது. இது அமைக்கப்பட்டு 1500 ஆண்டுகள் ஆய்விட்டன எனத்துணியலாம். பல்லவர்கள்டெக்கானில் உள்ள கன்னடர் (திராவிடர்) என்பது ஆராய்ச்சியாளரின் முடிபு.

திருக் கோணேஸ்வரத்தில் காணப்படும் சிற்பவடிவங்களும், திருமலைக் கச்சேரியில் வைக்கப்பட்டிருக்கும் இலக்குமி, விஷ்ணு முதலிய இரு சிலைகளும், மற்றும் கோட்டையில் வைத்துக்கட்டப்பட்டுள்ள செதுக்கப்பட்ட தூண்களும்—இவை 7-ம் நூற்றாண்டில் பல்லவர்களால் அமைக்கப்பட்டன என்பதற்கு சாட்சி பகருகின்றன.

வரி விளம்பரம்

மானிப்பாயில் காணிவிற்பனை

மானிப்பாய் தெற்கில், கோமன் ஒழுங்கையில் 3½ பரப்புக் காணி வாங்க விரும்புவோர், விபரத்திற்கு ஆ. க. விஜயரத்தினம், அரசாங்க அளவையாளர், வாழைச்சேனை என்ற விலாசத்துக்கு எழுதவும்.

இப்படிக்கு, ஆ. க. விஜயரத்தினம். 1964

விற்பனைக்கு அல்சேஷன் குட்டிகள்

உயர் ஜாதி அல்சேஷன் குட்டிகள் விற்பனைக்குண்டு. 7 வாரக்குட்டிகள் வெண்சாம்பல் நிறம் அதிகமுள்ளதும் மங்கிய நிறமுள்ளது மானவை. விபரங்களுக்கு: இல.8, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 1965

விற்பனைக்கு

சாவகச்சேரி புகையிரதநிலையத்தின் எதிரில் 14 பரப்புள்ள நெற்காணி விற்பனைக்கு உண்டு. குடியிருப்புக்குப் பாவிக்கலாம். விபரங்களுக்கு திருமதி சி. ஜே. சின்னப்பா, 9, சோமசுந்தரம் அவன்யூ, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். 1956

தேவை

ஹரிசன் லிஸ்டர் மின்சார இயந்திரங்களை இயக்குவதில் தேர்ச்சி பெற்றுள்ள, தச்சவேலை, மின்சார வேலைகள் தெரிந்த ஒருவர் தேவை. சில்லறை வேலைகளும் செய்ய தயாராக இருக்கவேண்டும். பிறப்புஅத்தாட்சிப் பத்திரம், கல்வித்தராதரப் பத்திரம், கற்சாட்சிப் பத்திரப் பிரதிகளுடன் காரியதரிசி, கூட்டுறவு ஆஸ்பத்திரி, மூளாய் என்ற விலாசத்துக்கு 29-2-64க்கு முன் மனுச்செய்க. 1958

தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநாதர், கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்.

3-வது மகத்தான வாரம்

திங்ளி (கொழும்பு) நிளாலை (வெள்ளவத்தை)

விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (நீதிமன்று) மொடேர்ன் (பதுளை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - பத்மினி

எம். ஆர். ராதா, மனோகர், வி. கே. ராமசாமி, புஷ்பலதா, தங்கவேலு, சகுந்தலா, ஜி. வரலக்ஷ்மி

பி. எஸ். சரோஜா, சம்பந்தம்

மற்றும் பலர் நடிக்கும்

மொடேர்ன் தியேட்டர்ஸ்

காட்டு ரோஜா

இசை: கே. வி. மகாதேவன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

எம். ஜி. ஆர். — அஞ்சலிதேவி நடித்த

சர்வாதிகாரி

பாடசாலை புனருத்தாரண ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சைவப்பிள்ளைகள் 60 சத வீதத்துக்கு மேலாகவுள்ள பாடசாலைகளுக்கு சைவதமிழ் தலைமை ஆசிரியர் நியமிக்கப் படவேண்டுமென, வண்ணார் பண்ணைப் பாடசாலைகளின் புனருத்தாரணம் சம்பந்தமாக வடபிரதேச ஆசிரிய சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப் பட்ட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வடபிரதேச ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. காசிப் பிள்ளையால் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப்பாடசாலையிற் கூட்டப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்ப்பாணமேயர் திரு டி. எஸ். துரைராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் வண்ணார்பண்ணைப் பிள்ளைகளுக்கு முதலிடம் அளிக்கப் படவேண்டும் என்னும் தீர்மானமும் வேறு தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கிரிக்கெட்

5-வது டெஸ்ட்

புதுடில்லி, பெப். 15

இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையேயான இறுதியான 5-வது டெஸ்ட் கிரிகெட் இன்று கான்பூரில் ஆரம்பமாகியது. இங்கிலாந்து கோஷ்டி தனது முதலாவது ஆட்ட நேர இறுதிவரை 3 விக்கெட் நஷ்டத்துக்கு 252 ரன்கள் எடுத்துக்கொண்டது.

இலங்கைவரும் ஐ. நா. நிபுணர்குழு

கொழும்பு, சனி

நாட்டில் இரும்புக் கனியம் இருப்பது பற்றி ஆராய்ச்சி நடத்த ஐ நா. இலங்கைக்கு விஷேச நிபுணர்குழு ஒன்றை அனுப்பவிருக்கின்றது. இதற்கான அறிவித்தலை திறைசேரியின் பொருளாதாரப் பிரிவு டைரக்டர் திரு. ரி. குணரத்ன பெற்றுள்ளார்.

மனச்சோர்வுக்கு மருந்து!

வாஷிங்டன், பெப். 15

மனச்சோர்வு வியாதிக்கு புதிய மருந்தொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. "என்டோகிலான்ட்" என்னும் இப்புதிய மருந்து பல நோயாளிகள் மூலம் பரிசோதனை செய்யப்பட்டபோது இதுவரையும் பாவிக்கப்பட்டமின்காந்த அதிர்ச்சி முறையை விட அதிக பலனளித்துள்ளதாக கூறப்படுகிறது. மெரிலண்ட் பல்கலைக்கழக கண்டுபிடிப்பான இப்புதிய மருந்தை அமெரிக்க உணவு மருந்து இலாகா அங்கீகரித்துள்ளது.

லாவோஸ் நிலைமை

லண்டன், பெப் 15

லாவோஸில் இராணுவ நிலைமை நெருக்கடியாக உள்ளதாக லாவோஸ் வலதுசாரி துணைப்பிரதமர் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது

மரண அறிவித்தல்

சின்னாச்சி

காலஞ்சென்ற அருணாசல சபாபதியின் மனைவியும், காலஞ்சென்ற திருமதி கே. கதிரவேலு, எஸ். இராஜநாயகம், திருமதி என். எஸ். சபாரத்தின சிங்கம் ஆகியோரின் தாயாருமான சின்னாச்சி நேற்று காலமானார். அன்னாரது பூதவுடல் காரைநகர், டிஸ்பென்சறி லேனிலுள்ள வாசஸ்தலத்திலிருந்து காரைநகர் மயானத்துக்கு இன்று மாலை 4 மணிக்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

உறவினரைக் காண சந்தர்ப்பம்

கி. ஜெர்மன் அரசாங்கம் ஆலோசனை

லண்டன், பெப். 15

நத்தார்பண்டிகையின்போது மேற்குஜெர்மன் மக்கள் கிழக்கு ஜெர்மனியிலுள்ள தமது உறவினர்களைச் சந்திக்க அனுமதிக்கப்பட்டதுபோல் ஈஸ்டர் பண்டிகையின்போதும் அனுமதிக்க கிழக்குஜெர்மன் அரசாங்கம் ஆலோசனை செய்து வருவதாக அறியப்படுகிறது.

ஆண்டுவிழா

துணுக்காய், வெள்ளி

பாரதி கிராம முன்னேற்றச் சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா துணுக்காய்ப் பகுதிக் காரியாதிகாரி திரு. ச. ஜெயநாதன் தலைமையின்கீழ் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர் திரு. சி. கந்தசாமி, தலைமையாசிரியர் திரு. இ. கந்தசாமி, திரு. வே. இளைய தம்பி, சங்க உப தலைவர் திரு. வ. நல்லையா. செயலாளர் ந. கு. சிவஞான சண்முகம் ஆகியோர் சொற்பொருக்காற்றினார்கள். அதன்பின் உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது.

தலைவர்: திரு மு. கைலாயர். உப தலைவர்: சி. கந்தவனம், செயலாளர்: திரு. கு. சிவஞான சண்முகம். உப செயலாளர் திரு இ. கதிரவேலு தனாதிகாரி: திரு. ப. விநாயகமூர்த்தி, பரிசேதகர்: திரு இ. கந்தசாமி,

ரஷ்ய தூதர் எங்கே?

ஜெனிவா, பெப். 15

ஜெனிவா படைக்குறைப்பு மகாநாட்டில் கலந்து கொள்ள விருந்த சோவியத் தூது கோஷ்டித் தலைவர் திரு செமியோன சராப்கின் ஜெனிவாவில் தாம் தங்கியிருந்த ஹோட்டலைவிட்டுச் சென்று விட்டதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

மாஸ்கோ சமர்ப்பித்திருந்த 9 அம்ச மகஜரில் முதல் மூன்று அம்சங்களான வெளிநாடுகளில் இருக்கும் துருப்புக்கள் வாபஸ் பெறப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் ராணுவத் துருப்புக்களின் எண்ணிக்கை குறைக்கப்பட வேண்டும், இராணுவ செலவு குறைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கைகளும் விவாதிக்க முதலிடம் தரப்பட வேண்டுமென முன்னர் தெரிவிக்கப் பட்டிருந்தது. ஆனால் திடீரென இது மாற்றப்பட்டது.

இவை பற்றித் தெளிவான விளக்கம் கொடுக்க முடியாத நிலையில் திரு. தராப்கின் இருந்ததாலேயே அவர் இவ்விதம் படைக்குறைப்பு மகாநாட்டில் பங்குபற்றவில்லை எனவும் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஈழநாட்டினர் ஆசையோடு அருந்தும் மால்டெட் பால்

ஆச்சரியப்படவும் வேண்டுமா! நெஸ்டோமோல்டில் சுவை நிரம்பியிருப்பதால் அனைவரும் அருந்த ஆசைப்படுகின்றனர்! ஏற்கனவே நீங்கள் ஒரு நெஸ்டோமோல்ட் பிரியராக விருக்க வேண்டும் (அநேகமாக எல்லோரும் அப்படியே); அப்படியில்லாதபடசத்தில், இன்றே இதன் இனிய சுவையை பருகி அறியுங்கள்—மகிழ்ச்சியடைவீர்களே தவிர மனம் வருந்தமாட்டீர்கள்! சூடாகவோ அல்லது ஐஸ்—குளிர்மையாகவோ அருந்தக்கூடிய நெஸ்டோமோல்ட், நாள் முழுக்க உற்சாகத்துடன் திகழக் செய்யும் வெறும் புத்துணர்ச்சியூட்டும் பானமோ அன்றியும் சுவை நிரம்பிய தாக சாந்தியோ அல்ல! டின்னை உற்றுப் பார்த்தால் உண்மை விளங்கும்—நெஸ்டோமோல்ட் உங்களுக்கு எத்துணை அளவு நன்மை புரிகின்றதென்பது புலப்படும்! இழந்த வலிமையை மீட்கவும், கடடுமஸ்தான தேகத்தோடு மிளிரவும் உறுதுணை புரியும் ஊட்டச் சத்துக்களும், ஆரோக்கியமூட்டும் பொருட்களும் இதில் செழுமையாக அடங்கியுள்ளன. அளப்பரிய நன்மையும், சுவையும் ஒருங்கே அளிக்கின்றது என்றளவில் நெஸ்டோமோல்ட் நிகரற்று விளங்குகின்றது!

இலவச சாம்பிள்
நெஸ்டோமோல்ட் இலவச சாம்பிள் டின் ஒன்றைப் பெற உங்கள் பெயர், விலாசத்துடன் தபாற் செலவுக்கு 25 சத முத்திரையும் அனுப்பி வையுங்கள்:
நெஸில்ஸ் புரோடக்ட்ஸ் (சிலோன்) லிமிட்டெட்,
தபால் பெட்டி: 189, கொழும்பு.

நான் விரும்புவது நெஸ்டோமோல்ட் அதெனக்கு நன்மையை அளிக்கிறது!

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது